jpUf;Fws; rpe;jidapy; njhy;fhg;gpa newpkugpd; jhf;fk;

(THIRUKKURAL SINTHANYIL THOLKAAPPIYA NERI MARABIN THAAKKAM)

No.F.MRP- 6871/16 (SERO / UGC) LINK NO : 6871

UGC MINOR RESEARCH PROJECT
(2017 – 2019)
FINAL REPORT

Submitted by

Dr.G.Sankara Veerapathiran
Associate Professor
V.P.S.Tamil Research Centre
The M.D.T. Hindu College

திருக்குறள் சிந்தனையில்
தொல்காப்பிய நெறி மரபின் தாக்கம்

தமிழில் முழுமையாகக் கிடைத்த முதல் இலக்கணநூல் தொல்காப்பியம் ஆகும். இந்நூல் காலப் பழமையும், வாழ்வியல் பெருமையும் அழகும் அருமையும் வாய்ந்ததோடு முப்பெரும் பகுப்பில் 27 இயல்களைக் கொண்டு திகழ்கிறது.

தொல்காப்பியரின் காலம் பற்றி அறிஞர்களிடயே பல்வேறு கருத்து நிலவுகிறது .நாவலர் சோமசுந்தர பாரதியார் கி.மு.1□க்கு முன் என்றும் சி.இலக்குவனார், கா.சு.பிள்ளை கி.மு.7க்கு முன் எனவும். மது.ச.விமலானந்தன், சி.பாலசுப்பிரமணியன் கி.மு.5க்குமுன் என்றும், மு.வரதராசனார் கி.மு.3என்றும் இரா. .இராகவையங்கார் கி.மு.2 என்றும் பல தரப்பட்டுக் கூறினாலும் கி.மு.வுக்கு முன் என்பது தெளிவு.

உலகில் பைபிளுக்கு அடுத்து அதிகமாக மொழி பெயர்க்கப்பட்ட பெருமை உடையது திருக்குறள். உலகப் பொதுமறை, உத்திரவேதம், தமிழ் மறை, பொய்யா மொழி என்று பலவாறு போற்றப் பெறும் திருக்குறள், உலக மொழிகள் பலவற்றில் பெயர்க்கப்பட்டது என்னும் பெருமை உடையது..

திருவள்ளுவரின் காலம் பற்றி கி.மு.1 என வி.ஆர்.தீட்சிதரும். கிறித்து பிறப்பதற்கு 3□ ஆண்டுகளுக்கு முன் என மறைமலை அடிகளும்,கி.மு.1 – 3 என இராசமாணிக்கனாரும், தொல்காப்பியர் காலத்திற்குப் பின் சங்க காலத்திற்கு முன் என, தமிழண்ணலும், கி.பி. 6 என, பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையும் கூறுகின்றனர்.

நோக்கம்

திருக்குறள், தொல்காப்பியத்தை அடியொற்றியும், விலகியும் சென்ற இடங்களைக் கண்டு அதற்கான காரணங்களை விளக்குவது ஆய்வின் நோக்கமாகிறது.

கருதுகோள்

திருக்குறள் காலச்சூழலுக்கு ஏற்ப உருவத்திலும், உள்ளடக்கத்திலும், மாற்றங்களைச் செய்து தன்னை தகவமைத்துக் கொண்டுள்ளது… .

இயல் பகுப்பு

ஆய்வுப் பகுப்பு அறிமுகம், மெய்ம்மைகள் நீங்கலாக ஐந்து இயல்கள் கொண்டதாக அமைகிறது. அவ்வியல்கள்

1. தொல்காப்பியம், திருக்குறள் – சமூகப் பின்புலம்

2. அகச் செய்திகளில் ஒன்றுபடும் இடங்கள்

3 .புறச் செய்திகளில் ஒன்றுபடும் இடங்கள்

4. அகச் செய்திகளில் மாறுபடும் இடங்கள்

5. புறச் செய்திகளில் மாறுபடும் இடங்கள் ஆகும்.

திருவள்ளுவர் தமக்கு முன்பிருந்த முன்னோர் நூல்களைப் பொன்போல் போற்றிச் சென்றுள்ளமையை தொல்காப்பியர் கருத்தை எளிமையாக்கித் தந்ததிலிருந்து அறிந்து கொள்ளமுடிகிறது., தொல்காப்பியம் மக்களின் வாழ்வியலை உள்ளவாறே பதிவு செய்ய, திருக்குறள் இப்படித்தான் மனிதன் வாழவேண்டும் என்று வரையறுத்துக் கூறுகிறது. மேலும். தொல்காப்பியத்தின் அக, புறப் பாடு பொருளை, திருக்குறள் நீதி இலக்கியத்தில் புகுத்தியதன் மூலம் அக்காலச் சமூகத் தேவை, வளர்ச்சி, மற்றும் மறுமலர்ச்சியை மதிப்பிடலாம்

ஆய்வுப் பயன்

தமிழ்ச் சமூகத்தின் நெடும் பயணத்தை பண்பாட்டு அடிப்படையில் புரிந்து கொள்ள வழி வகை செய்கிறது. ஒரே சமயத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப்படுகிற படைப்பாளிகளின் மாற்றத்தையும் ஏற்றத்தையும் கண்டறிவது ஆய்வின் பயனாகிறது.

இயல் - 1

தொல்காப்பியம், திருக்குறள் - சமூகப்பின்புலம்

தொல்காப்பியர் ஐந்திலக்கணத்தை இருபத்தேழு இயல்களில் மூன்றதிகாரங்களில் விளக்கி உள்ளார். ஒரு மொழி, செம்மைத் தன்மை பெற வரிவடிவம் அவசியம். அதன் பிறப்பு பற்றி அறிவது மிகவும் மேன்மைக்கு உரியதாகிறது. இவ்வெழுத்துக்களின் ஒலிக்கும் அளவு, முறை. எழுத்துக்கள் தொடர்ந்து பொருள் தரும் சொல் அதன் வகை, அகம், புறம் சார் செய்திகள், யாப்பியல் ஆகியனவற்றைத் தெளிவாகத் தம் நூலான தொல்காப்பியத்தில், தொல்காப்பியர் விளக்கி உள்ளார். அவர் தம் காலச் சமூகப் பின்புலத்தை இவ்வியல் விளக்குகிறது.

தொல்காப்பியர்

ஆரிய மேலாதிக்கம் தென்னிந்தியாவில் முழுமையாக உட்புகுந்தவிட்ட காலத்தைச் சார்ந்தது தொல்காப்பியம்.

இது ஏறத்தாழ கி.மு.2500 அளவில் கார்த்தவீரியார்ச்சுனன் மக்களோடு மேற்கொண்ட போருக்குப் பின்னர் வட இந்தியாவிலிருந்து விடைபெற்றுக் கொண்ட பரசுராமன் தலைமையில் தென்னிந்தியாவிற்குக் குடிபெயர்ந்த பாரத்துவாச கோத்திரத்து ஒரு பிரிவாம் காப்பியக் குடியைச் சார்ந்த ஒரு பிராமணர் திரனது மாக்கினியரால் இயற்றப்பட்டது என்பர்..

எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் ஆரிய வாழ்க்கைச் சட்டங்களைத் தமிழர்கள் மீது திணிக்கவும் தமிழர்களின் சமுதாய மற்றும் இலக்கிய பழக்க வழக்கங்களை ஆரிய பழக்கவழக்கங்களோடு ஒன்றுபடுத்திக் காணவும் முயன்றுள்ளனர்……..இவ்விரண்டும் எண்ணெயும் நீரும் போல சிறிதளவிலும் ஒன்று கலவா எனற புலவர் கோவிந்தன் கருத்து இங்கு சிந்திக்கத்தக்கது **(ஆரியர்க்கு முற்பட்ட தமிழர் பண்பாடு பக். 36 - 37).**

தொல்காப்பியம் என்ற நூலைத் தந்தமையால் தொல்காப்பியர் என வழங்கப்பட்டார் என்ற பிறர் கூறுவதாக ஆனந்தன் கூறுவது **(தமிழ் இலக்கிய வரலாறு ப.11)** எண்ணத்தக்கது.

தொல்காப்பியம்

ஒரு மொழியின் அமைப்பினை விளக்கிக் கூறும் இலக்கணம் விளக்க இலக்கணம் எனப்படும். தொல்காப்பியம் ஒரு விளக்க இலக்கணமாகும் என்கிறார் பேரா. ஏ. ஆதித்தன். (தமிழ் இலக்கணவியல் ப. 2)

தொல்காப்பியன் வகுத்தும் தொகுத்தும் சேர்த்தும் எழுதிய நூல் ஆதலால் தொல்காப்பியம் என்ற பெயர் பெற்றிருக்கலாம்,

தமிழின அறிவுப் பாரம்பரியத்தின் அடையாளம் தொல்காப்பியம். இது ஒரு இலக்கண நூல் மட்டுமல்ல தமிழ்ச் சமுதாய வரலாற்றின் ஒரு அங்கம்.

பாணினியின் செறிவும், பதஞ்சலியின் திட்பமும், அரிஸ்டாட்டிலின் தெளிவும் அவையனைத்திலும் இல்லாத வனப்பும் அளவை நூான் முறையமைப்பும் பெற்றுச் செறிவும், தெளிவும் நெறியில் நெகிழ்வும் நிரம்பியது என்ற பெ. மாதையன் கருத்து கவனிக்கத்தக்கது. **(தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி வளர்ச்சி வரலாறு ப.33)**

தொல்காப்பியம் இலக்கிய ஆக்கங்கள் அனைத்துக்குமான ஒரு பெரிய ஒழுங்கமைவைக் கொண்டுள்ளது. அதற்குப் பெயர் திணையியல் அல்லது திணை இலக்கியங்கள் என துரை. சீனிச்சாமி கூறுகிறார். **(தொல்காப்பியமும் இலக்கியவியலும் பக். 12 – 13)**

இலக்கியங்களைக் கோட்பாட்டு முறைமை வழி ஆராயும் அறிவுமுறை தமிழிலக்கிய மரபில் தொன்மையானது என்றும் தெரிவிக்கும் கருத்தும் சிந்திக்கத் தக்கது. **(மேலது)**

தொன்மையான திணைக் கவிதை மரபினைத் தொல்காப்பியம் புதுமையாக்கி அன்பின் ஐந்திணை என்ற கோட்பாட்டாக்கமாக்கி உள்ளது என்பர்.

தொல்காப்பியம் இயற்றக் காரணம்

தமிழ் நூல்கள் பல கடல்கோள், பாதுகாப்புணர்வின்மை, நூலின் அருமை தெரியாமை, ஓலைச் சுவடியிலிருந்தமை போன்ற காரணங்களால் அழிந்து விட்டன. மொழியைப் பாதுகாத்து அடுத்த தலைமுறை பயன்படுத்தவும் : வளர்ச்சி மாற்றங்கள், பற்றித் தெரிந்து கொள்ளவும்,

படைப்பாளியின் படைப்பு ஒரு நெறிமுறைக்குள் அமையவும், பிற மொழியினர் தமிழ் கற்கவும் இலக்கண நூல் அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டே தொல்காப்பியர் இலக்கணம் படைத்தார் எனலாம்.

தமிழ்நாட்டு வழக்கு மொழியையும், செய்யுள் மொழியையும் நன்கு ஆராய்ந்தவர். அவருக்கு முற்பட்ட நூல்களையும் கற்றுத் துறை கண்டவர். இதனால் தொல்காப்பியத்தை எழுதினார் என்பார் சோம. இளவரசு **(தமிழ் இலக்கிய வரலாறு ப. 5)**

தொல்காப்பியப் பாயிரம்

தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி எனக் கூறுவதால் தொல்காப்பியம் என்பது புனை பெயராகும்.

தொல்காப்பியர் அகத்தியர் மாணாக்கர் என்றும் இல்லை என்றும் கூறுவர். அதங்கோட்டு ஆசான் தொல்காப்பியரின் ஆசிரியர் என்றும் கூறுவர்.

காலம்

தொல்காப்பியரின் காலத்தை

1. கி.மு. 10க்கு முன் - நாவலர். சோமசுந்தர பாரதியார்
2. கி.மு. 7க்கு முன் - சி. இலக்குவனார்.
3. கி.மு. 5க்கு முன் - மது. சு. விமலானந்தன், கா.சு.பிள்ளை
4. கி.மு. 3 – மு.வ.
5. கி.மு. 2 - இராகவய்யங்கார்

கூறுவதாக பாக்யமேரி தெரிவிக்கிறார் **(வகைமை நோக்கில்.... தமிழ் இலக்கிய வரலாறு ப.38)**

சங்க இலக்கியங்கள், திருக்குறள் போன்றவற்றில் தொல்காப்பியக் கருத்துக்கள் உள்ளன. அதனால் அவற்றிற்கு முந்தியது தொல்காப்பியம் என்பதில் ஐயமில்லை என்ற ச.வே.சு., கூற்று கருதத் தக்கது.

தொல்காப்பியத் தொடர்களும், கருத்துக்களும் திருக்குறளில் உள்ளன. இலக்கியச் சொற்கள் அடிப்படையில் நோக்கும் போது திருக்குறள் காலம் கி.மு. முதல் நூற்றாண்டில் தோன்றியிருக்க வேண்டும் என்பது தெளிவு என்கிறார் ச.வே.சு. **(தமிழ் இலக்கிய வரலாறு ப.90)**

நால்வகைப் வருணப் பாகுபாடும் நிலை பெற்றுவிட்ட காலத்திலே தொல்காப்பியம் தோன்றியது என்கிறார் பெ. மாதையன். **(மு.க.நூ. பக். 81 – 83.)**

வருணம்

மக்களை நிலவாரியாக வகைப்படுத்தியது அல்லாமல் ஒவ்வொரு நிலத்திலும் மக்கள் ஆற்றும் தொழில்களோடு வகைப்படுத்தியும் உள்ளனர். அவர்கள் மன்னர், வள்ளல், வெள்ளாளர், வணிகர் இவர்களெல்லாம் உயர்ந்தோர் அல்லது மேலோர் எனப்பட்டனர். வினைவலர் மற்றும் அடியோர் அவர்கள் உழைப்பாளிகள் மற்றும் குற்றேவல் புரிவோராவர் என புலவர் கோவிந்தன் (மு.க.நூ. ப.39) கூறுகிறார். மேலும் இதற்கு, தொல்காப்பியப் பொருளதிகார நூற்பா 21-32 ஐச் சான்றாகத் தருகிறார்.

மேலோர்

மன்னர், வள்ளல், வேளாளர், வணிகர் உயர்ந்தோர் மேலோராவர்.

கீழோர்

உழைப்பவர், குற்றேவல் செய்வோர் வினைவலர் அடியோர் கீழோராவர்.

ஏன்ற இருவகைப் பிரிவினரைத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் குறிப்பிடுகிறார். (நூற் : 21 -32)

நால்வருணக் கோட்பாடு ஆரியர்களின் வழக்கம் இதனைத் தமிழ்ச் சமூகத்தில் ஒப்பிட்டுக் காட்ட பெரிதும் தொல்காப்பியர் முனைந்துள்ளார் என்கிறார் புலவர் கா. கோவிந்தன். **(மு.க.நூ. ப. 42)**

பார்ப்பனச் செல்வாக்கு

தொல்காப்பியர் காலத்திலும் பார்ப்பனச் செல்வாக்கு ஓங்கியிருந்தது என்பதனை பல நூற்பாக்கள் (**புறத்திணையியல் 74 : செய்யுளியல்: 181,182, கற்பியல் 5, 36, 144, மரபியல் 11, 73)**, உணர்த்துகின்றன.

பார்ப்பான்

தொல்காப்பியர் தம்காலத்தில் செல்வாக்குப் பெற்ற பார்ப்பனர்களைக் கூறத் தயங்கவில்லை.

பார்ப்பான் என்பவன் பாணன், கூத்தன், பாங்கன், தோழி முதலியவர்களைப் போல உயர்ந்த வகுப்பினருக்கு ஊழியஞ் செய்து அவர்கள் உதவி பெற்று வாழ்ந்தவர்கள்.

இவர்கள் ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், வேள்வி செய்வித்தல், கொடை பெறுவது, கொடை கொடுக்கச் செய்வது ஆகிய ஆறு வகைத் தொழில்களைச் செய்து வந்தனர்.

இதனை

அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும் (தொல்: புறத்: **74)** உறுதி செய்யும்.

அந்தணர் நாகரிகம் பெற்ற வகுப்பைச் சார்ந்தவர்.

தமிழ்ச் சமூகக் கட்டுமானத்தில் பார்ப்பனர்கள் நிலையானதொரு இடத்தைப் பெற்றனர் மேலும் சமூகக் கட்டுமானத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றதை பேரா. **தி.சு.நடராஜன்** மதிப்பிட்டுள்ளார் **(சமூக விஞ்ஞானம் பழந் தமிழகத்தில் பார்ப்பனர்கள் ப.4)**

தொல்காப்பியச் சிறப்பு

தொல்காப்பியர் அகச்செய்திகளை

1. **அகத்திணையியல்**
2. **களவியல்**
3. **கற்பியல்**
4. **பொருளியல்**

ஆகிய இயல்களில் எடுத்துரைத்துள்ளார்

புறத்திணையியல் என்ற ஒரு தனி இயலில் போர் பற்றிய செய்திகளைக் கூறினாலும் பிற இயல்களிலும் போர் தவிர்த்த புறச்செய்திகள் பற்றிப் பேசுகிறார்.

தொல்காப்பியத்திற்கு 150 பதிப்புகளுக்கு மேல் வந்துள்ளதாகவும், உலகம் முழுவதும் தொல்காப்பியச் சுவடிகள் 133க்கு மேல் உள்ளதாகவும் ச.வே.சு. கூறுகிறார் **(மு.க.நூ. ப.34)**

சமூகப் பின்புலம்

ஆணைப் போருக்குத் தயார் செய்வதும், பெண்ணை இனப்பெருக்கத்திற்குத் தயார் செய்வதுமான காலக் கட்டத்தில் தொல்காப்பியம் எழுந்தது. ஆண்கள், பெண்கள் எண்ணிக்கை சமச்சீரற்ற நிலையில் இருந்த காலக்கட்டம் அது.

தொன்மையான திணைக் கவிதை மரபைத் தொல்காப்பியர் புதியதாக்கி அன்பின் ஐந்திணை மரபாகக் கோட்பாட்டாக்கம் செய்கிறது.

தொல்காப்பியம் குறிப்பிடும் கவிதையியல், இனவரைவியல் கவிதையியலாகும் என்ற முனைவர் ஞா. ஸ்டீபன் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும். **(தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும் ப.17)**

குடும்பம்

குடும்பம் என்ற சமூக நிறுவனம் சார்ந்து இத்திணைகளை (அன்பின் ஐந்திணை) தொல்காப்பியர் ஒரு பகுப்பிற்குள் கொண்டு வந்து விரிவாக்கம் செய்வதாக துரை. சீனிச்சாமி கூறுகிறார் **(மு.க.நூ. ப.25)**

தாய்வழிச் சமூகம்

மனித இன வரலாற்றில் வேட்டைக் குழுவே மனிதன் அமைத்துக் கொண்ட முதல் சமூகக் குழுவாகும். சிறு குடியாக இருந்த இக்குழு பல்கிப் பெருகி விரிவடைந்தது. இதனைத் தொல்குடிச் சமூகம், இனக்குழுச் சமூகம் என்பர். இச் சமூகத்தை ஆய்வாளர்கள் பழங்குடிச் சமூகம் என்றனர்.

புறநானூறு 353 ஆம் பாடல் **தொல்குடி** என்கிறது.

இதனை வேட்டைச் சமூகம் என்றும் கூறுவர் இதில் பெண்ணுக்கே முதன்மை. வயது முதிர்ந்த மூதாட்டி வேட்டைக்குச் செல்ல இயலாத காரணத்தால் குகையிலிருப்பாள். இம் மூதாட்டியின் வழிகாட்டுதலில் தலைவி நிலையிலிருக்கும் பெண் வேட்டைக்குச் செல்வாள். ஆண்களும் உடன் செல்வர். கற்காலம் ஆதலால் கல்லைக் கொண்டு உருவாக்கிய கருவிகள் பல கொண்டு வேட்டை நிகழ்த்தப் பெறும். வேட்டை முடிந்து குகை திரும்புவர்.

வேட்டை முடிந்து திரும்பும் வழியில் பெண்ணுக்கு உடற்பசி ஏற்பட்டால் விரும்பும் ஆணுடன் இணைவாள்.

இந் நிகழ்வு பின்வரும் நாள்களிலும் தொடரும். உருவாகும் குழந்தைக்குத் தந்தை யாரென்று அறியமுடியாது. இதனால் பெண்ணே தலைவி : தாய்.

தந்தையில்லை. இதனையே தாய்வழிச் சமூகம் என்பர்.

இச் செய்தியை ராகுல சாங்கிருத்தியானின் **(வால்கா முதல் கங்கை வரை)** நூலில் விரிவாகக் காணலாம்.

பொதுமைப் பாலுறவும், குழுமணங்களும் அக்காலத்திய நியதி. அந்நிலையின் விளைவாகத் தந்தை வழியற்ற தாய் வழியே முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பார் கா.சுப்பிரமணியன். **(சங்க காலச் சமுதாயம் ப.3)**

வடமொழியில்

அம்மா என்பது பிரத்தியட்சம்.

அப்பா என்பது அனுமானம்.

என்று கூறுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

இதனையே ரஜனிகாந்த் நடித்த பணக்காரன் என்ற திரைப்படத்தில்

அம்மா வந்து சொன்னாதான் அப்பாவின் பெயர் தெரியுமப்பா

அதுவுந்தான் இல்லையின்னா தப்பாகித்தான் போகுமப்பா

என இளையராஜா குரலில் ஒலிக்கும் நான் உள்ளுக்குள்ளே சக்கரவர்த்தி ….. பாடலில் காணலாம்.

தாய் வழிச்சமூகத்தில் பெண்ணே அனைத்தும். ஆண், பெண் வழிகாட்டுதலில் அவளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த காலம். கற்பு, திருமணம் என்ற வளர்ச்சி நிலை எய்தாக் காலம்.

இனக்குழுச் சமுதாயத்தில் குலத்தின் குலக்குறியைத் தெய்வமாக வழிபட்டனர். இம் மக்கள் தாங்கள் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு ஆற்றல் காரணமாகிறது என்று நம்பினர். அந்த ஆற்றலை அணங்கு, சூர், கடவுள், பேய் என்று கருதினர்.

நிலவுடைமைச் சமூகம்

வேட்டையாடியும் கிழங்குகளை அகழ்ந்தெடுத்தும் உண்டு வாழ்ந்த மனிதனின் அடுத்த படி நிலையாக வேளாண்மை அமைகிறது. காடுகளை அழித்துக் கழனி ஆக்குகிறான். இதற்குக் கடின உடலுழைப்பு தேவைப்பட்டதால் அதனை ஆணே செய்கிறான். அவனுக்குத் தேவையான உணவை ஆயத்தம் செய்ய பெண் முனைந்தாள். அன்று முதல் ஆணாதிக்க சக்தி மேலோங்குகிறது.

மனிதன் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து இயங்குகிறான்.

குறுநில மன்னன் முதல் பேரரசன் வரை படிப்படியான வளர்நிலை அடைகிறான். செல்வச் செழுமையினால் பரத்தை தொடர்பு உருவாகிறது.

இயற்கை வழிபாட்டிலிருந்து மாறி நிலத்துக்கொரு தெய்வம் உருவாகிறது. ஆரியச் செல்வாக்கினால் பல மாற்றங்கள் சமுதாயத்தில் ஏற்படுகிறது. சமண பௌத்தச் செல்வாக்கு குறைகிறது.

அரசு தோற்றம்

ஓர் அரசு தோன்றுவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் அக, புறக் காரணங்கள் என்பதே பொருத்தமாக அமையும்.

அகக் காரணங்கள்

செல்வந்தர் வர்க்கம் தனது நிலையைத் தக்க வைக்க உழைக்கும் வர்க்கத்தைச் சுரண்டுவதை நியாயப்படுத்த முயலும். ஆளும் வர்க்கம் தனது நிலைக்குச் சமூகத்தின் ஒப்புதலைப் பெறும் பொருட்டுச் சமயம், இலக்கியம் போன்றவற்றைக் கருவிகளாகப் பயன்படுத்தும். இவையெல்லாம் அரசு தோன்றுவதற்குரிய அகக்காரணங்கள் என்கிறார் துளசி. இராமசாமி. **(தமிழக வரலாற்றில் ஒளிர்வது களப்பிரர் காலம் ப.43)**

தமிழகத்தில் போரும் பூசலுமான நிலை. புலவர்கள் மன்னர் தம் போரினையும், போரற்ற சூழலில் மன்னனை மகிழ்விக்க காதல் இலக்கியங்களையும் படைக்கின்றனர்.

பல இலக்கியங்கள் தோன்ற அதனை நெறிப்படுத்த இலக்கண நூல்களும் தோன்றுகின்றன. காலமாற்றத்தில் அவை அழிந்து போகின்றன. இக்காலக்கட்டத்தில் தொல்காப்பியம் தோன்றுகிறது. முன்னூல்கள் கூறிதை தொல்காப்பியர் என்ப, என்மனார், அறிந்திசினோரே, தெளிந்துசினோரே போன்ற நூற்பா முடிக்கும் சொற்களாகப் பயன்படுத்துகிறார்.

தொல்காப்பியர் தம் காலத்தில் நிலவிய, நிலவுடைமைச் சமூகம், தந்தை வழிச் சமூக ஆதிக்கம், பார்ப்பன ஆதிக்கம், இனக் குழுச் சமூகத் தொடர்ச்சி, எழுத்தியல் நிலை, சொல் வழக்கு, செய்யுளியல் போன்றவற்றைப் பதிவு செய்யத் தவறவில்லை.

படைப்பாளி தன்னைச் சுற்றியுள்ள புறவுலகின் அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள் ஆகிய அனைத்தையும் உற்று நோக்கி அவற்றின் தனிப்பட்ட இயல்புகளையும், இயக்கங்களையும் நன்றாகப் புரிந்து கொண்டு அவற்றுடன் தன் கற்பனையையும் இணைத்து இலக்கியம் படைக்க வேண்டும் என்பதே தொல்காப்பியரின் கருத்தாகும் என்ற ஆ. சிவசுப்பிரமணியன் கருத்து இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும். **(இனவரைவியலும் தமிழ் நாவலும் . ஆராய்ச்சி 46. ப. 5)**

தொகுப்புரை

1. தொல்காப்பியர் என்ற பெயருக்கு காப்பியக் குடியில் பிறந்ததால் தொல்காப்பியர் என்ற பெயர் பெற்றார் என்றும், தொல்காப்பியம் என்ற நூலைத் தந்தமையால் இப்பெயர் என்றும் கூறப்படுகிறது.

2. தொல்காப்பியம் சமண முனிவர்கள் தமிழ் கற்க எழுதப்பட்டது என்றும், தொல்காப்பியர் தம் கால வழக்குகளைப் பதிவு செய்து, பின்வரும் நூலாக்கம் செய்பவருக்கு வழிகாட்டவும், உதவும் இலக்கண நூல்.
3. தொல்காப்பியரின் காலம் தாய்வழிச் சமூகத்தின் இறுதிக்காலம். தந்தை வழிச் சமூகத்தின் வளர் நிலைக் காலமாகும்.
4. தொல்காப்பியர் தம் காலத்தில் நிலவி வந்த அன்பின் ஐந்திணை, எழுதிணை, ஏழு புறத்திணை வழி அகம், புறம் சார் செய்திகளைப் பதிவிடத் தவறவில்லை.
5. தொல்காப்பியர், பார்ப்பனர் சமுதாயத்தில் பெற்ற இடத்தையும் சுட்டத் தவறவில்லை.
6. தொல்காப்பியர், தமக்கு முன்னிருந்த செய்திகளை என்மனார், அறிந்திசினோரே, தெளிந்திசினோரே, என்ப போன்ற சொல் அல்லது தொடர் மூலம் அறியலாம்.
7. வருங்காலத்தில் மொழியில் ஏற்படும் மாற்றங்களை நன்குணர்ந்து அதனை ஏற்றுக் கொள்ளச் சொல்கிறார்.
8. அக்காலத்தில் நிலவி வந்த சொற்களின் துணை கொண்டு உரியியல் என்ற இயலமைத்து அகராதி தோன்ற வித்திட்டுள்ளார்.
9. இன்று அறிவியல் பல்துறையாகப் பல்கிப் பெருகியுள்ளது. ஆனால் அன்றே இலக்கண நூலாயினும் அதில் உயிரியல், மொழியியல் போன்றவற்றைப் பதிவிட்டு எதிர்காலத் தலைமுறையினருக்குப் பயன்படும் வண்ணம் தம் கடமையை ஆற்றி உள்ளார் தொல்காப்பியர்.
10. தமிழ் கூறும் நல்லுலகிற்கு முழுமையான இலக்கண நூலை அளித்து உயர் தனிச் செம்மொழியாக உயர்வு பெற தம்காலச் சமூகப் பின்புலத்தைத் தொல்காப்பியர் பயன்படுத்திக் கொண்டார்.

திருக்குறள் - சமூகப் பின்புலம்

மேற்கணக்கு நூல்கள் என அழைக்கப்படும் சங்க இலக்கியக் காலத்திற்குப் பின் எழுந்த கீழ்கணக்கு நூல்களில் ஒன்று திருக்குறள். அறநூல்களில் ஒன்றான திருக்குறள் புரட்சியையும், புதுமையையும் கொண்டு திகழ்வதொடு அனைவருக்கும் பொதுமையான நூலாகவும் விளங்குகிறது. வள்ளுவர் தன் காலத்திலிருந்த பல பழக்க வழக்கங்களைப் பதிவு செய்ததொடு அதில் பலவற்றை மாற்றியும், மனிதன் இவ்வாறுதான் இருக்கவேண்டும்

என்ற இலட்சியப் பாதையையும் காட்டி உள்ளார். வள்ளுவர் காலச் சமூகப் பின்புலத்தைப் பகுத்தறிந்து வகைப்படுத்தி இவ்வியல் விளக்குகிறது.

சமுதாய நிலை

வேட்டைச் சமுதாயமாகவும், கால்நடையை வளர்க்கும் சமுதாயமாகவும் இருந்த மனித சமுதாயம் இரும்பைக் கண்டுபிடித்த பின் உழுகருவிகளைக் கொண்டு வேளாண்மை செய்து வளர்ச்சி பெற்ற சமுதாயமாக உருவாகியது. வேளாண்மைக்கு நீர் அவசியம். மழை தேவை. மழையைத் தருவிக்க மந்திரங்கள், சடங்குகளால் முடியும் என்ற அந்தணர்கள் கூறினர். இதனை மன்னனும் நம்பினான்.

பார்ப்பான்

பார்ப்பான் என்பவன் பாணன், கூத்தன், பாங்கன், தோழி முதலியவர்களைப் போல உயர்ந்த வகுப்பினருக்கு ஊழியஞ் செய்து அவர்கள் உதவி பெற்று வாழ்ந்தவர்கள்.

இவர்கள் ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், வேள்வி செய்வித்தல், கொடை பெறுவது, கொடை கொடுக்கச் செய்வது ஆகிய ஆறு வகைத் தொழில்களைச் செய்து வந்தனர்.

இதனை

அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும் (தொல்: புறத்: 74) உறுதி செய்யும்.

அந்தணர்

அந்தணர் என்ற சொல்லை

அம் + தண் + அர் எனப் பிரித்து அழகான குளிர்ச்சி பொருந்திய தன்மை உடையவர் என்ற பொருள் கூறுவர்.

அந்தணர் நாகரிகம் பெற்ற வகுப்பைச் சார்ந்தவர்.

என்று சாமி சிதம்பரனார் கூறுகிறார். **(தொல்காப்பியத் தமிழர் பக். 92 – 93)**

தமிழ்ச்சமூகக் கட்டுமானத்தில் பார்ப்பனர்கள் நிலையானதொரு இடத்தைப் பெற்றனர் மேலும் சமூகக் கட்டுமானத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றதை பேரா. தி.சு. நடராஜன் மதிப்பிட்டுள்ளார் **(சமூக விஞ்ஞானம் பழந் தமிழகத்தில் பார்ப்பனர்கள் ப.4)**

பழங்காலத்தில் பார்ப்பனர்களில் பெரும்பாலானோர் வேதத்தை ஓதிக் கொண்டு ஒழுக்கக் கேடர்களாக இருந்து வந்துள்ளனர் என்பதை

……………………பார்ப்பான்

பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் (குறள் : 134)

வழி அறியலாம். மேலும் கலித்தொகை 65ஆம் பாடலும் ஒழுக்கக் கேடான பார்ப்பனனைக் கூறுகிறது.

அந்தணன், பார்ப்பான் என்ற இருவகையினர் இருந்தனர். பிற்காலத்தில் இரண்டும் ஒரு பொருளையே தந்தன.

வள்ளுவர் வாழ்ந்தது நிலவுடைமைச் சமுதாயத்தில். அக் காலத்தில் தமிழக்தில் வழக்கிலிருந்த சமணம், பௌத்தம், தமிழர் சமயம், பல தத்துவங்கள் எதற்கும் முதன்மை அளிக்காது, சமயத்தைப் பரவலாகவே வள்ளுவர் குறளில் குறிப்பிட்டுள்ளார். இதனை வா.செ. குழந்தைசாமி

1. திருக்குறளில் வரையறுத்துக் குறிப்பிடத் தக்க அளவில் எந்தவிதமான சமயச்சார்பும் இடம்பெறவில்லை. எந்த சமயமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.
2. ……………..அவர் சமயம் தொடர்பான எந்தத் தடயத்தையும் விட்டுச் செல்லவில்லை.

எனக் கூறியுள்ளது கவனிக்கத் தக்கது. **(காலம் காலமாக வரும் கற்பனை நகர்கள் வள்ளுவர் படைக்கும் வையத்துச் சுவர்க்கம் ப.130)**

முதல் புரட்சி

மனு

வள்ளுவர் மனுவின் வருணப் பாகுபாடு, பிறப்புப் பற்றியக் கோட்பாட்டை, மறுத்து, பிறப்பில் அனைவரும் சமம் என்பதை உறுதி செய்கிறார்.

சான்று

அறவோனே அந்தணன்

பிறப்பொக்கும் …..

ஆட்சிமுறை

ஆட்சியாளர்களைப் பற்றிப் பேசாமல் ஆட்சியின் உறுப்புகளை

1. தலைவன் (குறள் :383)
2. தலைவன் பண்புகள் (குறள் :386)
3. செயல் முறை (குறள் :677)
4. பொது உறுப்பு (குறள் :383)

பற்றி ஆகிய குறள்களில் பேசுகிறரர்

மன்னர் ஆட்சிமுறையை எங்கும் பரிந்துரைக்கவில்லை.
வாரிசு பற்றி அறவே பேசவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது. **(வா.செ.குழந்தைசாமி, மு.க.நூா ப.130)**

பொருளாதார அமைப்பு

தொடக்க காலத்தில் அடிப்படைப் பொருளாதரத் தொழிலாக வேளாண்மையும், மனிதனின் முக்கிய உடைமையாக நிலமும் இருந்தது. 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சி ஆலைகளை உருவாக்கின. பல மாற்றங்களையும் உருவாக்கின.

மனித உழைப்பு, உற்பத்தியைப் பெருக்கி செல்வத்தைத் தந்தது. அச் செல்வம் அனைவருக்கும் பயன்பட வள்ளுவர் விரும்பியதை

ஊருணி நீர் நிறைந்தற்றே….. (குறள் : 215)

பயன் மரம்……………………(குறள்: 216)

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்…..(குறள் : 322)

ஆகிய குறள்கள் வழி அறியலாம்.

என்று ரா. கண்ணன் கூறுகிறார். **(கருத்துருவும் கட்டளையும் ப-36)**

ஊழைக் கூட விடா முயற்சியால் வெல்லலாம் (குறள் : 620) என்று நம்பிக்கை தருகிறார்.

கடவுள் ஆன்மா மறுப்பு

புத்தர் தமது தலையாய நோக்கமாகத் துயரமில்லாத வாழ்க்கையை மனித சமுதாயத்திற்குக் காட்ட முனைந்ததை வள்ளுவர் ஆன்மா, கடவுள் மறுப்பாகத் தருகிறார்.

சடங்கு மறுப்பு

ஆரியர்கள் தங்களது செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ள பல சடங்குகளைத் தமிழர்களிடையே புகுத்தினர். புரியாத மொழியில் மந்திரங்களை உச்சரித்தனர். முதலில் ஆட்சியாளர்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து வேள்விகளைத் தங்களை (ஆரியர்களை) வைத்து செய்ய வைத்தனர். இவை போலித்தனமான, தேவையற்றது எனக் கருதிய வள்ளுவர் அதனைக் கண்டிக்கிறார்.

சான்றாக

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றின்

உயிர் செகுத்து உண்ணாமை நன்று. (குறள் : 259) என்ற குறளின் மூலம் வேதகாலச் சடங்குகளையும் மறுக்கிறார்.

ஒருவனுக்கு ஒருவன் செய்யும் உதவியே வேள்வி **(குறள் : 87,88)** என்பதை அறியலாம்.

புறந்தூய்மை நீரான் …. (குறள் : 298)

மனத்தது மாசாக………..(குறள் : 278)

மனத்துக்கண் மாசிலன் ஆதல் (குறள் : 34)

ஆகியன வைதீக சமயத்தை எதிர்க்க எழுந்தது என்ற பா. வீரமணியின் கருத்து ஒப்பு நோக்கத் தக்கது. **(வள்ளுவரின் உலகப் பார்வை ப. 76)**

சமயப் பதிவு

வள்ளுவரின் காலத்தில் புழக்கத்தில் இருந்த இந்திரன், செய்யான், செய்யவன், முகடி, தாமரையான், அடியளந்தான், தாமரைக் கண்ணான் போன்ற வேதமரபுத் தெய்வங்களை ஆங்காங்கே சுட்டிச் செல்கிறார்.

கடவுள் வாழ்த்தில் ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இலான், அறவாழி அந்தணன் என இறைவனின் தொன்மையையும் பண்பையும் சிறப்பையுமே போற்றிச் செல்கிறார். எவ்விடத்தும் இறைவன் பெயரைச் சுட்டவில்லை.

வாழ்வியல் விழுமியங்கள்

சமுதாயத்தில் பின்பற்ற வேண்டிய விழுமியங்களாக

விருந்தோம்பல், செய்நன்றி அறிதல், ஒழுக்கம் உடைமை, பயனில சொல்லாமை, ஒப்புரவறிதல், ஈகை, புகழ் போன்றவற்றைத் தனித் தனி அதிகாரங்கள் மூலம் வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

உழவின் மேன்மை

ஆரியச் சட்ட நூலான மனு 10வது அத்தியாயம் 84வது சுலோகம்

சிலர் பயிரிடுதலை நல்ல தொழில் என்று நினைக்கிறார்கள். அந்தப் பிழைப்பு பெரியோர்களால் நிந்திக்கப்பட்டது. ஏனெனில் இரும்பை முகத்திலுடைய கலப்பை மண்வெட்டும்பொழுதும் பூமியை அகழும்பொழுதும் பூமியிலுள்ள பற்பல ஜந்துக்களையும் வெட்டுகிறது அல்லவா?.....

என்று கூறி உழவினை இழிவாகப் பேசுகிறது என்று கி.வீரமணி (www.viduthalai.com) கூறுகிறார்.

மனு உழவை, சமூகத்தில் சம நீதி ஏற்படாமலிருக்க இகழ்ந்து தாழ்வாகக் கூற வள்ளுவர் உலகத்திற்கே அச்சாணி என்றும் உழுபவர் பின்னால் அனைவரும் தொழுதுண்டு செல்வர் எனவும் கூறி உழவை முதன்மைப் படுத்துகிறார். **(குறள் : 1031, 1032, 1033)**

அறம்

மனதில் மாசற்ற நிலையே அறம் என்பதை

மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் (குறள் : 34)

அறம் பெருக நல்லதையே பேசவேண்டும்

அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை

நாடி இனிய சொலின் (குறள் 96)

இனிய சொற்களைப் பேசுவது அறம் (குறள் : 93)

என்று கூறியுள்ளார்.

தெய்வம்

கணவனே தெய்வம் என வாழும் மனைவி சொன்னால் மழை பெய்யும் என்பதை

தெய்வம் தொழாஅள் கொழுனன் தொழுது எழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை. (குறள் : 55)

என்ற குறளாக்கி உள்ளார்.

இதில் கணவனைத் தெய்வ நிலைக்கு உயர்த்துகிறார்.

சாபம்

ஒரு மனிதன் பிச்சை எடுத்து வாழும் நிலை வந்தால்

பரந்து கெடுக

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகு இயற்றியான் (குறள் : 1062)

என சபிக்கிறார்.

ஊழ்

தொடக்க காலத்தில் ஊழ் என்பது முளைப்பது, முளைவிடுவது என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.

முற்பிறவியின் கர்ம வினைப்பயன் இப் பிறவியிலும் முளைப்பது என்கிறது (tamilmarXism.blogspot.com 2016/17)

ஒவ்வொருவருடைய உடலிலும், உயிரிலும் ஊழ்த்திருப்பது ஊழ். காயில் விதை, விதையில் அதன் மலர், காய் இருப்பது போன்றது ஊழ் என ta.m.wikipedia.org வும்

புலன்கள், பொறிகளின் வாயிலாகச் செயற்பாட்டுக்கும், பயனுக்கும் வருவது ஊழ் எனக் குன்றக்குடி அடிகளார் கூறுவதாக https://tam.wikisource.org. வும் கூறுகிறது.

இலக்கியங்களில் ஊழ்

அகநானூறு, பரிபாடல், குறிஞ்சிப்பாட்டு ஆகியன ஊழ் பற்றி

முலை ஞெமுங்க பல் ஊழ் அடைதல் (அகம் : 58)

விசும்பில் ஊழி ஊழ் செல்ல (பரி : 2)

தழலும் தட்டையும் …….ஊழ்

ஊழ் வாங்கி (குறிஞ்சிப் பாட்டு : 44)

என்று கூறுகின்றன.

விதியைத்தான் தமிழ் இலக்கியங்கள் ஊழ் என்று சொல்கிறது. ஒரு பிறவியில் விதித்துக் கொள்வதை மறு பிறவியிலும் அனுபவிக்கிறான் என temple.dinamalar,com தெரிவிக்கிறது.

ஒருவர் தாம் செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்பவே நன்மை தீமைகளைப் பெறுகிறார் இதுவே ஊழாகும்
இதனை வள்ளுவர் ஆகூழ், போகூழ் என இருவகையாகக் கூறுகிறார்.

ஆகூழ்

ஆகூழினால்

1. பொருள் சேர்வதற்குரிய முயற்சி உண்டாகும்.
2. செல்வம் சேர்வதற்கான அறிவினை விரிவடையச் செய்யும் என்றும்

ஆகூழால் உணவு, உடை கிடைக்கவில்லை ஆயின் துறவு கொள்ளச் சொல்கிறார் .

போகூழ்

போகூழினால்

1. சோம்பல் உண்டாகும்.
2. செல்வ இழப்பு

ஏற்படும **(குறள் : 371 , 37)** என்றும் வள்ளுவர் விளக்கிச் செல்கிறார்.

ஒருவரின் அறிவு நூல் பல கற்றதனால் மட்டும் உருவாகாது. அவரவரின் ஊழினாலே ஏற்படும் என்றும் வள்ளுவர் **(குறள் : 374)** கூறுகிறார்.

வலிமை

ஊழே வலிமை உடையது என்பதை

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று

சூழினும் தான் முந்துறும் (குறள: : 380)

எனவும் கூறுவதைக் காணலாம்.

ஆடவர்களைக் கண்டித்தல்

வள்ளுவர் காலத்தில் ஆண் பெண்ணுக்கு அடங்கிப் போகும் நிலை தோன்றிவிட்டது. ஆண் பல பெண்களை மணக்கலாம், இன்ப நுகர்ச்சிக்காகப் பரத்தையரோடு கூடி வாழலாம் என்பதனை அகப்பாடல் வழி அறியமுடிகிறது.

அக்காலத்தில் நிலவிவந்த ஆண்-பெண் சமத்துவமற்ற நிலையை ஏற்றுக் கொள்ளவில்லை என்ற பா. வீரமணி கருத்து கவனிக்கத் தக்கதாகிறது. **(மு.க.நூ. ப. 115)** அதற்கு வரைவின் மகளிர் **பிறனில் விழையாமை** அதிகாரங்களைச் சான்றாக்குகிறார்.

வள்ளுவர் தம் காலத்தில் நிலவிய சமுதாயச் சூழலை அப்படியே நிலைத்திருக்க வேண்டும் என்பதை விரும்பியதில்லை. இதனால் தான் பல மாற்றங்களைப் புரட்சிகரமாகச் செய்துள்ளார்.

இல்லற உயர்வு

வள்ளுவர் துறவறத்தை விட இல்லறமே உயர்ந்தது என்பதை பலவிடங்களில் கூறிச் செல்கிறார். இல்லறத்திற்கே தமிழ்ப்பண்பாட்டில் உயர்ந்த இடம் உண்டு என்பதை

இல்வாழ்க்கை என்பதே அன்பும் அறனும் (குறள் : 45)

என்ற குறள் உணர்த்தும்.

துறவிகள், மனைவி, மக்கள், சுற்றத்தார், வறுமையில் உழல்வோர் ஆகியோருக்கு மட்டுமன்றி விருந்தினருக்கும் உற்ற துணையாய் இல்லறத்தான் விளங்குகிறான் என்பார் கோவிந்தசாமி ராசகோபால்.

(திருக்குறள் கருத்துப் புலப்பாட்டில் அணியியல் -பண்பாட்டு அசைவில் சில சொற்கள் கருத்துப் புலப்பாடும் பொருள் மாற்றமும் - கட்டுரை ப.28)

விருந்தோம்பல்

விருந்தோம்பல்., தமிழர் பண்பாட்டில் தலையாய இடத்தைப் பெறுகிறது

இல்லறத்தான் வனம் சென்று துறவு மேற்கொள்ளாததற்குக் காரணமே விருந்தினரைப் போற்றி வாழ்வதற்கே என்பதை

இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டே (குறள் : 82)

எத்தகு எதிர்பார்ப்பும் இன்றி விருந்தோம்புபவனே பிற்காலத்தில் தேவர்களுக்கு நல் விருந்தாவான் என்றும்,, விருந்தோம்பல் ஒரு வேள்வி போன்றது என்றும் வள்ளுவர் தெரிவிக்கிறார். **(குறள் : 86, 87)**

ஈகை

வறியார்க்கு ஈவதே ஈகை.(221)

என இரத்தினச் சுருக்கமாக ஈகைக்கு இலக்கணம் தருகிறார் வள்ளுவர்.

இலட்சியப்பாதை

வள்ளுவர் காலத்தில் உயிர்க்கொலை, பொய் கள்ளுண்ணல் போன்றவை வழக்கத்திலிருக்க அதனைக் கண்டித்து கொல்லாமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை வகுத்து இலட்சியப்பாதயை உருவாக்கி உள்ளார்,

தொகுப்புரை

1. பல தெய்வ வழிபாடிருந்த தமிழகத்தில் தமிழில் இயற்றிய திருக்குறளில் கடவுள் என்ற பெயரே இடம் பெறாமல் குறளை இயற்றி சமயப் பொதுமையைக் கொணர்ந்தது போற்றலுக்குரியது.

2. வள்ளுவர் காலம் நிலவுடைமைச் சமுதாயக்காலம். அக்காலத்தில் உள்ள மன்னனையோ, குறிப்பிட்ட சமுதாயத்தையோ சுட்டாமல் குறளைப் படைத்துள்ளது அவர் தம் துணிவையும், பொதுமை நோக்கையும் காட்டுகிறது.
3. வள்ளுவர் பொது நியதியைக் கூற பிறன்மனை நோக்காமை, வரைவின் மகளிர் உறவைக் கண்டிப்பது, பரத்தையர் பிரிவு கூறாதது போன்றவற்றைப் பயன்படுத்தி உள்ளதைக் காண இயல்கிறது.
4. பார்ப்பான், அந்தணன் என்ற புலம் பெயர்ந்தோர் மன்னனிடத்திலும், மக்களிடத்தும் அதிக செல்வாக்கையும் உயர்ந்த இடத்தையும் பெற்றனர் என்பதையும் சுட்டத் தவறவில்லை.
5. சமண, புத்த வரவால் பார்ப்பனர், அந்தணர் செல்வாக்கு சரிந்தது.
6. பல பார்ப்பனர் ஒழுக்கக் கேடர்களாக இருந்துள்ளனர் என்பதனையும் கூறியுள்ளார்.
7. வள்ளுவர் அந்தணர் என்போர் அறவோர் என்ற புது வரையறையைக் கொணர்ந்தார்.
8. சமுதாய வாழ்வியல் விழுமியங்களுக்காக பல அதிகாரங்களைப் வள்ளுவர் படைத்தார்.
9. ஆணுக்கும் பெண்ணுக்கும் சமநீதி ஏற்பட பிறனில் விழையாமை, போன்ற அதிகாரங்களையும் வள்ளுவர் வகுத்துள்ளார்.
10. துறவறத்தை விட இல்லறமே உயர்ந்தது என்பது வள்ளுவர் கொள்கை.
11. தமிழ்ப் பண்பாட்டின் விருந்தோம்பலை பதிவு செய்யத் தவறவில்லை வள்ளுவர்.
12. வறியவர்க்கு ஈவதே ஈகை என புதிய வரையறையையும் தருகிறார்

இயல் 2

அகச் செய்திகளில் ஒன்றுபடுமிடங்கள்

தொல்காப்பியர் அகம் பற்றிய செய்திகளை அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்களில் பேசுகிறார். இச்செய்திகளை அடித்தளமாகக் கொண்டு வள்ளுவர் அமைத்த குறள்களை ஒப்பிட்டு ஒன்றுபடுமிடங்களை ஆராய்ந்து வகை, தொகைப்படுத்தி இவ்வியல் விளக்குகிறது.

அகத்திணை

அகப் பொருளில் இயற்பெயர் இடம் பெறலாகாது என்பதை

மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்

சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார் (தொல் : அகத் : 57)

இதனையே வள்ளுவரும் பின் பற்றுகிறார். களவியல் கற்பியலில் தலைமக்கள் பெயர் சுட்டாதே குறள்களை அமைத்துள்ளார்

களவொழுக்கக் குறிப்பு

தலைமக்களின் கண்கள் அவர்களது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துவதே களவொழுக்கக் குறிப்பு என்பதை, தொல்காப்பியர்

நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்

கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும் (தொல் :களவு : 93) என உரைக்கிறார்.

இதற்கு வள்ளுவர் குறிப்பறிதல் என்று ஒரு தனி அதிகாரமே வகுத்துள்ளார்.

தலைவன் பார்வைக்கு இணக்கமாகப் பார்க்கும் தலைவி பார்வை போர்ப்படையுடன் வந்தது போலிருந்தது என்ற கருத்தமைய

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு

தானைக் கொண்டது அன்னது உடைத்து (குறள் : 1082)

என அமைத்துள்ளார்.

மேலும்

கண் களவு……………..(குறள் : 1093)

நோக்கினாள் …………. (குறள் : 1094)

ஆகிய குறள்களையும் தக்க சான்றுகளாக்கலாம்.

களவொழுக்கத் தொடர்ச்சி

குறிப்பே குறித்தது கொள்ளுமாயின்

ஆங்கவை நிகழும் என்மனார் புலவர் (தொல் :களவு : 94)

என்ற நூற்பாவின் வழி தலைவனின் மனக்குறிப்பை அறிந்து தலைவியின் கண்ணும் கருத்தும் உடன் பட்டால் களவொழுக்கம் தொடரும் எனத் தொல்காப்பியர் வெளிப்படுத்துகிறார்.

இதனை வள்ளுவரோ

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்

வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல (குறள் : 1100)

காதல் தொடர கண்களே போதும். சொற்கள் ஏதும் தேவையில்லை என்ற பொருள்பட அமைத்துள்ளதையும் காணலாம்.

காமம்

இவ்வுலகில் நாணமும் பேதமையும் பாதுகாவலாக இருக்கக் காமத்தை வெளிப்படுத்தாத கண்களில்லை இதனைத் தொல்காப்பியர்

காமம் சொல்லா நாட்டமின்மையின்

ஏமுற இரண்டும் உள என மொழிப (தொல் : களவு : 107)

இதனை வள்ளுவர்

உண்டார்க ணல்ல தடுநறா……. (குறள் : 1090)

கள் உண்டவருக்கே மயக்கத்தை ஏற்படுத்தும் ஆனால்

தலைவியின் கண்களோ பார்த்தாலே மயக்கத்தை ஏற்படுத்தும் என்ற பொருள்தரும் குறளையும்

தலைவியின் பார்வை இருவகை கொண்டது.

ஒருவகை நோயை உண்டாக்கும். மற்றொரு வகை உண்டாக்கிய நோயைத் தீர்க்கும்.

இருநோக்கு இவளுண்கண்……….(குறள் : 1091)

என்ற பொருள்தரும் குறளையும்

தலைவியின் கண்பார்வை உடற்புணர்ச்சியால் உண்டாகும் இன்பத்தில் பாதியன்று. அதை விட மிகுதியானது.

கண்களவு கொள்ளும்……………(குறள் 1092)

என்ற பொருள்தரும் குறளையும் தக்க சான்றாக்கலாம்.

தலைமக்களின் பண்பு

தலைவன் பெருமை மிக்கும் உள்ள உறுதியுடன் இருக்க

தலைவியோ அச்சம், மடன், நாணம், என்ற மூன்று பண்புகள் கொண்டிருக்க வேண்டும்

அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல் : களவு: : 96)

எனக் கூற

தலைவன் தலைவியைப் பார்க்கும் போது நிலத்தைப் பார்ப்பாள் : பார்க்காத போது தலைவனைப் பார்த்து மெல்லச் சிரிப்பாள் என்ற பொருளமைய

யான் நோக்குங்கால் நிலன் நோக்கும் நோக்காக்கால்

தான்நோக்கி மெல்ல நகும் (குறள் : 1094)

என்றாக்கி உள்ளதை அறிய முடிகிறது.

மேலும்

நோக்கினாள்............... (குறள் : 1093) என்ற குறள்

நோக்கு மற்றும் நாணத்திற்கும்

குறிக்கொண்டு............ (குறள் : 1095)

நாணம் மற்றும் மகிழ்ச்சிக்கும் தக்க சான்றுகளாகும்.

இயற்கைப் புணர்ச்சிக்கு முன்

முதல் நிலையில் மெய்தொட்டுப் பயிறல் முதல் தீராத்தேற்றம் ஈறாக எண் வகையான நிகழ்வுகள் ஏற்படும் **(தொல் :களவு : 99 : 1 – 5).**

இதில் ஒன்று பொய்பாராட்டல்.

பொய்பாராட்டல்

தலைவியின் நெற்றி, கூந்தல் முதலியவற்றைக் கற்பனை நயம் தோன்ற தலைவன் பாராட்டுவதே பொய்பாராட்டல் ஆகும்.

தலைவன் தலைவியின் மேனி தளிர் ; பல் : முத்து இயல்பான மணம் நறுமணம் மையுண்ட கண்கள் வேல் தோள்கள் மூங்கில் எனப் பாரட்டுவதை

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்

வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு (குறள் : 1113)

என்கிறார் வள்ளுவர்.

கடாஅக் களிற்றின்மேல் ...... (குறள் : 1087)

குறள் தலைவியின் முலை அழகிற்கும்

ஒண்ணுதற் கோ…….. (குறள் : 1088)

என்ற குறள் நெற்றி அழகிற்கும்

பிணையோ ………… (குறள் : 1089)

என்ற குறள் அணிகல அழகிற்கும் தக்க சான்றுகள்.

இடம் பெற்றுத் தழாஅல்

இயற்கைப் புணர்ச்சியின் முதல் நிலையில் மூன்றாம் நிலையாக அமைவது இடம் பெற்றுத் தழாஅலாகும்.

தலைவியின் அழகைப் பாராட்டியபின், அதனையே வழியாகக் கொண்டு அவளைத் தழுவ முயலுதல் இடம் பெற்றுத் தழாஅலாகும்.

தலைவியின் பாத மென்மையினை வருணிக்குமிடத்து அனிச்சப் பூவும் அன்னத்தின் இறகுகளும் நெருஞ்சி முள்ளாகக் குத்தும் எனக் கூறுவதை

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்

அடிக்கு நெருஞ்சிப் பழம் (குறள் : 1120) என்கிறார் வள்ளுவர்.

இயற்கைப் புணர்ச்சி

ஒத்த பண்புள்ள தலைவனும் தலைவியும் எதிர் பட்டு ஒருவரை ஒருவர் விரும்பி களவு வாழ்க்கையை மேற்கொள்வதே இயற்கைப் புணர்ச்சி ஆகும். இதில் ஒருவர்க்கு ஒருவர் ஐயம் உண்டாயின் சிறப்புடையதாகும் என்பதை

சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப (தொல். களவு: 91)

எதிர் பட்ட தலைவியை, தலைவன் கொண்ட ஐயத்தை

வள்ளுவர்

அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ (குறள் : 1108)

எனக் கூறுவதைக் காணலாம்.

குறி

குறி என்பதற்கு **இடம்** என்பது பொருள். இது இருவகைப்படும்.

குறி எனப்படுவது இரவினும் பகலினும்

அறியக் கிளந்த ஆற்றது என்ப **(தொல் : களவு : 128)**

பகற் குறி

பகற்புணர் களனே புறன் என மொழிப (தொல் : களவு : 130)

தலைவனும் தலைவியும் பகலில் சந்திக்குமிடம் இல்லத்திற்கு வெளியேயும் தலைவி அறிந்த இடமாகவும் இருக்கும்.

அனிச்சப் பூக்கால்களை….. எனத் தொடங்கும் குறளை **(1115)** பரிமேலழகர் பகற்குறிக்கண் பூவணி கண்டு சொல்லியதற்கு எடுத்துக் காட்டுகிறார்.

இரவுக் குறி

தலைவனும் தலைவியும் இரவில் சந்திக்குமிடம் இல்லத்தின் உட்புறமாகவும், அந்த இடம் யாரும் அறியாததாகவும் இல்லத்தில் உள்ளோர் பேசினால் காதில் விழும் தூரத்திலும் இருக்கும்.

இரவுக் குறியே இல்லகத்து உள்ளும்

மனையோர் கிளவி கேட்கும் வழி அதுவே

மனையகம் புகாக் காலையான (தொல் : களவு : 129)

இரவுக்குறிக்கண் மதி கண்டு சொல்லியது என்பதற்கு

மதியும் மடந்தை …… (குறள் 1116)

அறுவாய் நிறைந்த … .(குறள் 1117)

மாதர் முகம்……………(குறள் 1118)

மலரன்ன……………… (குறள் 1119)

ஆகிய குறள்களைத் தருகிறார்.

அல்ல குறி

அல்ல குறிப்பிடுதலும் அவள் வயின் உரித்தே

அவன் குறி மயங்கிய அமைவொடு வரினே (தொல் : களவு : 130)

களவொழுக்கத் தலைவன் தான் வந்ததை அறிவிக்க செய்த செயலை அறியாத தலைவி இயல்பாக நடந்தது என நினைத்தோ இயல்பாக நடந்ததை தலைவன் செய்த குறி என நினைத்தோ ஏமாந்து திரும்புவதற்கு அல்ல குறி என்று பெயர்.

இதனை

அல்ல குறிப்பட்ட பின் வந்த தலைவனிடம் தோழி

அலரெழ ஆருயிர்…………(குறள் : 1141) என்கிறாள்.

பாங்கற் கூட்டம்

பாங்கர் நிமித்தம் பன்னிரெண்டு என்ப (தொல் :களவு:: 101)

பாங்கன் பாங்கி காரணமாகக் கூடும் கூட்டம்

1. காட்சி
2. ஐயம்
3. தெளிவு
4. வேட்கை
5. ஒருதலை உள்ளுதல்

6. மெலிதல்

7. ஆக்கம் செப்பல்

8. நாணுவரை இறத்தல்

9. நோக்குவ எல்லாம் அவவை போறல்

10. மறத்தல்

11. மயக்கம்

12. சாக்காடு

என்பன ஆகும்.

தலைவன் பாங்கற் கூட்டத்தின் இறுதிக்கண் சொல்லியதாக

நீங்கினால் சுடும் அருகில் வந்தால் குளிரும் என்ற பொருளமைந்த

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்

தீயாண்டுப் பெற்றள் (குறள் : 1104) என்பதையும்

கூட்டுதலுற்ற பாங்கற்குத் தலைவன் தலைவியின் இயல்பைக் கூறியதாக

முறிமேனி எனத் தொடங்கும் குறளையும் (1113)

பாங்கற் கூட்டத்துச் சென்று சார்தலுறுவான் சொல்லியதாக

காணின் குவளை எனத் தொடங்கும் குறளையும் (1114) பரிமேலழகர் குறிப்பிடுகிறார்.

தோழியிற் கூட்டம்

தோழியிற் கூட்டத்தின் இறுதிக்கண் சொல்லியதாக

வேட்ட பொழுதின் எனத் தொடங்கும் குறளையும் (1105)

உறுதோறுயிர் எனத் தொடங்கும் குறளையும் (1106)

பரிமேலழகரே குறிப்பிடுகிறார்.

அம்பல்

ஊரார் பிறரைப் பற்றித் தவறான செய்திகளை மற்றவருக்குப் புலப்படாது மென்மையான குரலில் முணுமுணுத்து ரகசியமாகப் பேசிக் கொள்வது அம்பலாகும். **(தமிழ் இலக்கணப் பேரகராதி ப. 25)**

அலர்

ஊர் மக்களுள் சிலர் மற்றவர் செய்திகளைத் தக்க சான்றுகளுடன் உறுதி செய்து கொண்ட பின் பிறருக்குக் கேட்குமாறு இன்னானோடு இன்னாளிடை இது போன்று நிகழ்ந்தது என்று உரக்கப் பேசுவது அலராகும். **(மேலது ப. 32.)**

அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின்

அங்கு அதன் முதல்வன் கிழவனாகும் (தொல் : களவு : 137)

ஊரார் முகக் குறிப்பால் காட்டும் அம்பலும் பழிச் சொல்லால் வெளிப்படுத்தும் அலரும் தோன்ற, தலைவனே காரணமாகிறான்.

வள்ளுவர் ***அலரறிவுறுத்தல்*** என்று ஒரு அதிகாரமே **(115)** வைத்து அலர் பற்றிப் பேசுகிறார்

அலர் மொழி

களவும் கற்பும் அலர் வரைவு இன்றே (கற்பு : 21)

ஊரார் பேசும் அலர் மொழியாகிய பழிச் சொல்

இதனை வள்ளுவர்

கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும்
திங்களைப் பாம்பு கொண்டற்று (குறள் : 1146)

தலைவனைத் தலைவி ஒருநாளே பார்த்தாள். ஆனாலது திங்களைப் பாம்பு கவ்விக் கொண்டது போல அலராகி எங்கும் பரவியது என்ற பொருளில் அமைத்துள்ளார்.

1. **களவொழுக்கத்தில் இருவரின் உறவு பற்றியும்**
2. **கற்புக்காலத்தில் பிரிவு பற்றியும் அமைந்திருக்கும்.**

அலர் மொழி பயன்

அலரின் தோன்றும் காமத்தின் மிகுதி (கற்பு : 22)

ஊர் மக்களின் பழிச்சொல்லால் தலைமக்களின் காமவேட்கை மிகுதியாகும் என்று தொல்காப்பியர் இயம்ப

ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல்

நீராக நீளும் இந்நோய் (குறள் : 1147)

ஊராரின் பழிச்சொல் எருவாகவும், தாயின் பேச்சு நீராகவும் கொண்டு காம நோய் வளர்கிறது என்கிறார் வள்ளுவர்.

வரைவுகடாஅதல்

தோழி தலைவனிடம் விரைந்து திருமணத்தை நடத்த வேண்டுவதை

வரைவு உடன்பட்டோர்க்கு கடாவல் வேண்டின் (தொல் : களவு : 1143) என்கிறார் தொல்காப்பியர்.

வள்ளுவர்

கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும்

திங்களைப் பாம்பு கொண்டற்று (குறள் : 1146)

என்பதில் தலைவனை விரைந்து திருமணத்தை நடத்த வேண்டுவதைக் காணலாம். மேலும் 1141 – 1146 வரை உள்ள குறள்களிலும் காணலாம்.

பிரிவு

அகத்திணையியலில் தொல்காப்பியர் ஏறத்தாழ 13 (27 – 37 40 44) நூற்பாக்களைக் கூறியுள்ளார். இவை பிரிவு, பிரிவின் நிலை பற்றிப் பேசுகிறது.

திருமணத்திற்கு முன் தலைவன் பொருள் தேடப்பிரிந்து செல்வான்.

இதனை, தொல்காப்பியர்

வெளிப்படை ………………. (தொல்: களவு : 139)

தலைவன் பொருள் தேடச் செல்கிறான். தலைவி வருந்துகிறாள். தோழி தலைவைனை இயற்பட மொழியும் நிலையில் **இரு குறள்கள் (1129 , 1130*)*** உள்ளதாகப் பரிமேலழகர் குறிப்பிடுகிறார்.

பிரிவைத் தள்ளிப்போடல்

பிரிவைத் தள்ளிப் போடல் என்பது தலைவியைத் தன் வழிக்குக் கொண்டு வந்து அவள் இசைவைப் பெறுவதற்கே என்பதை

செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே

வன்புறை குறித்தல் தவிர்ச்சி ஆகும் (கற்பி : 44)

என்ற நூற்பா வழி அறியலாம்.

மடல்

தலைவனுடன் கொண்ட காதலுக்கு எவ்வளவு இடையூறு வந்தாலும் தலைவி மடலேறுதல் சிறந்த நெறியில்லை
என்பதைத் தொல்காப்பியர்

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான (தொல்: அகத் : 38)

மடல் பற்றிவள்ளுவர் நாணுத்துறவு உரைத்தல் அதிகாரத்தில் ஆறு குறள்களில் கூறியுள்ளார்.

காமம் உழந்துவருந்தினார்க்கு ஏமம்

மடல் அல்லது இல்லை வலி (குறள் : 1131)

நோனா உடம்பும் உயிரும் மடல் ஏறும்

நாணினை நீக்கி நிறுத்து (குறள் : 1132)

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்

காமுற்றார் ஏறும் மடல் (குறள் : 1133)

தொடலைக் குநற்தாடி தந்தாள் மடலொடு

மாலை உழக்கும் துயர் (குறள் : 1135)

மடல் ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற

படல் ஒல்லா பேதைக்கு என்கண் (குறள் : 1136)

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்

பெண்ணின் பெருச்தக்கது இல் (குற:ள் : 1137)

உடன் போக்கு

அகத்திணையியலில், தலைவி தலைவனுடன் உடன்போக்குச் சென்ற நிலையில் நற்றாய் **(39 40**) தோழி **(42)** கண்டோர் **(43)** தலைவன் **(44)** போன்றோர் கூற்றுக்களில் தொல்காப்பியர் கூறிச் செல்கிறார்.

பரிமேலழகர்

அனிச்சமும் அன்னத்தின்.........(குறள் :1120)

என்ற குறளை உடன்போக்குரைத்த தோழிக்கு அதனருமை கூறி மறுத்ததற்குச் சான்றாக்குகிறார்.

தலைவன் சிறைப்புறமாக உள்ளான். தோழி தலைவிக்கு சொல்லுவது போல் அலர் ஏற்பட்டதைக் கூறி உடன்போக்கு நயப்பச் சொல்லியதற்கு

தாம் வேண்டின் .... (குறள் : 1150) என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

பழந்தமிழர் அகவாழ்வில் அடிப்படையாக அமைவது களவு ஒழுக்கமாகும். யாரும் அறியாமல் தலைவனும் தலைவியும் தம்முள் கலந்து மகிழ்வதை களவு என்பர். இல்லறம் என்பதே முதலில் களவொழுக்கத்தில் தோன்றி கற்பில் முடியும்.

மணம்

உடன்போக்கிலும் திருமணம் நிகழ்வதை

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே (கற்பி : 2)

கீழோர் மணம்

மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்

கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே (கற்பி : 3)

மணச்சடங்கு தோற்றம்

பொய்யும் வழுவும் புகுந்த பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் (கற்பி : 4)

என்ற நூற்பாவின் வழி சமூகத்தில் பொய்யும் குற்றங்களும் விளைந்த பின்னர் மணம் என்ற சடங்கு தோற்றம் பெற்றதை அறியலாம்.

நினைந்தவர் புலம்பல்

கற்பியலில் தலைவி கூற்று நிகழுமிடத்தை தொல்காப்பியர் கூறுமிடத்து

………மகடூஉ புலம்பு பெரிதாகலின் (145 : 4) என்கிறார்.

வள்ளுவரோ நினைந்தவர் புலம்பல் என தனியதிகாரமே வகுத்துள்ளார்.

நினைப்பவர் போன்று நினையார் கொல் தும்மல்

நினைப்பது போன்று கெடும் (குறள் : 1203)

என்ற குறளையும்

யாமும் உள்ளோம்.................... (குறள் : 1204)

நம்நெஞ்சத் தெம்மை................. (குறள் : 1205)

ஆகிய குறட்பாக்களையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

பொருளியல்

தலைவி நாணம் விட்டுப் பேசல்

தலைவன் பிற பெண்டிருடன் இருந்து வந்ததை மறைக்கும் போதும், காமவேட்கை மிகும் போதும் நாணம் விட்டுப் பேசுவாள் என்பதை

தன்வயின் கரத்தலும் அவன் வயின் வேட்டலும்

அன்ன இடங்கள் அவ்வழி எல்லாம்

மடனோடு நிற்றல் கடன் என மொழிப (தொல் : பொருள் : ப.202)

என்கிறார் தொல்காப்பியர்.

வள்ளுவரோ

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்

யாரினும் யாரினும் என்று (குறள்: 1314)

என அமைத்துள்ளார்.

நிறையழிதல்

நிறையெனப் படுவது மறை பிறரறியாமை (கலி 123)

என கூறுகிறது.

நிறையுடையேன் என்பேன்மன் யானோவென் காமம்

மறையிறந்து மன்று படும் (குறள்:1254)

என்று குறள் கூறுகிறது.

புலவி

புலவி என்பதற்கு ஊடல் செல்லக் கோபம் பொய்யான கோபம் என்பது பொருள். (https://ta.m.wiktionary.com)

ஊடல் என்பது பிணக்கிக் கொள்ளும் ஒரு வகை நடத்தைப் பாங்கு. இது உளவியல் அடிப்படையில் தோன்றுகிறது என்றும் இதனை வள்ளுவர் புலவி துனி என இரு நிலையில் அமைத்துள்ளார்.

புலவி என்பது பொய்யை இட்டுக் கட்டிக் கொண்டு ஊடும் பாங்கு எனவும் பழுக்காமலிருக்கும் கருக்காய் போன்றது என்றும்

துனி ஊடலின் உச்சக் கட்டம் எனவும் கனிந்த பழம்

போன்றது எனக் கூறுவது ஒப்பு நோக்கத் தக்கது. (www.kuralathiran.com)

இக்கருத்து **(குறள் : 1306)** இல் உள்ளது.

அக்குறள்

துனியும் புலவியும் இல்லாயின் காமம்

கனியும் கருக்காயும் அற்று.

என்பதாகும்.

தொல்காப்பியர் தலைவன் தலைவியரின் ஊடலை

களவொழுக்கக் காலத்தில் தலைவி குறியிடம் தவறும் போதும் கற்புக் காலத்தில் அவளின் ஊடலின் எல்லை மிகும் போதும் தவைனுக்கு வெறுப்பும் ஊடலும் உண்டு என்ற பொருள் தரும்

உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்

புலத்தலும் ஊடலும் கிழவோற்கு உரிய (தொல்: களவு: 154) என்ற நூற்பாவையும்

அவன் குறிப்பு அறிதல் வேண்டியும் கிழவி

அகம்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்

வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே (தொல்:களவு : 7)

தலைவன் கொண்டிருக்கும் குறிப்பை அறிவதற்காகவும் உள்ளத்தில் உள்ள ஊடலை நீக்குவதற்காகவும் தலைவனை தலைவி வேறுபடுத்திப் பேசி ஊடலை வெளிப்படுத்துவாள்.

வள்ளுவர் புலவி (131), புலவி நுணுக்கம் (132) ஊடலுவகை (133) என மூன்று அதிகாரங்களையே தந்துள்ளார்

சான்று

உப்பு அமைந்தற்றால் புலவி இது சிறிது

மிக்கற்றால் நீள விடல் (குறள் : 1302)

ஊடலில் தோற்றவரே வென்றார் அதுமன்னும்

கூடலில் காணப்படும் (குறள் : 1327).

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம்

கூடி முயங்கப் பெறின் (குறள் : 1330)

ஊடல்

தலைவி ஊடல்

தலைவனின் குறிப்பை அறிந்து உள்ள ஊடலை நீக்க அவனை வேறுபடுத்திப் பேசி ஊடலை வெளிப்படுத்துவதை

அவன் குறிப்பு அறிதல் வேண்டியும் கிழத்தி

அகம் மலி ஊடல் ………… (கற்பி : 18)

எனும் நூற்பா வழி உணரலாம்.

தலைவனுக்கும் ஊடல் உண்டு. இது தலைவியின் ஊடல் எல்லை மிகும் போது தலைவனுக்கு வெறுப்பும், ஊடலும் ஏற்படும் என்பதை

உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்

புலத்தலும் ஊடலும் கிழவோற்கு உரிய (கற்பி : 15)

என்ற நூற்பா வழி அறியலாம்.

கற்பு வாழ்க்கையில் **தலைவன் கூற்றில்**

……..ஊடல் மிகுத்தோளை

பிற பெண்டிரின் பெயர்த்த கண்ணும் (கற்பி : 5 : 35 -36)

என்பதில் பரத்தையிற் பிரிந்து மீண்ட தலைவனும் ஊடல் கொண்ட தலைவியும் தனிமைப்பட்டு வருந்தும் போது நிகழும் கூற்றில் ஊடலுக்கான காரணம் கூறப்பட்டுள்ளது.

கூத்தர் ஊடல் தணித்தல்

தலைவன் தலைவி இருவருக்கம் இடையே உள்ள ஊடலை நீக்கி அன்புடன் வாழ, கூத்தர் உதவுவர். இதனை

பல்லாற்றானும் ஊடலின் தணித்தலும (கற்பி : 27)

குறளில்

புலவி

குறள் 1308 - 1310.

புலவி நுணுக்கம்

அதிகாரம் 133

ஆகியனவற்றில் வள்ளுவர் புலவி, புலவி நுணுக்கம் குறித்து வெளிப்படுத்தி உள்ளார்.

கனவு

கனவினை கனவுநிலையுரைத்தல் என்ற ஒரு அதிகாரமே அமைத்து விளக்கி உள்ளார்.

1211 1213 1216 1218 ஆகிய குறட்பாக்களில் கனவு பற்றிச் சிறப்பாக வள்ளுவர் வெளிப்படுத்தி உள்ளார்.

நெஞ்சொடு கிளத்தல்

124 – 126 ஆகிய குறட்பாக்களில் வள்ளுவர் நெஞ்சொடு கிளத்தலை விளக்கி உள்ளார்.

காமநோய் மேலீடு

1251, 1253, 1258, 1260 ஆகிய குறட்பாக்களில் வள்ளுவர் காமநோய் குறித்து வெளிப்படுத்தி உள்ளார்.

பசலை

1181, 1182, 1186, 1187 ஆகிய குறட்பாக்களில் வள்ளுவர் பசலையை வெளிப்படுத்தி உள்ளார்.

தொகுப்புரை

தொல்காப்பியரோடு வள்ளுவர்

1. அகமாந்தர்களின் பெயர் சுட்டல்
2. களவொழுக்கக் குறிப்பு
3. களவொழுக்கத் தொடர்ச்சி
4. காமம்
5. தலைமக்களின் பண்பு
6. இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் பொய்பாராட்டல்
7. இயற்கைப் புணர்ச்சியின் மூன்றாம் நிலையில் நிகழும் இடம் பெற்றுத் தழாஅல்
8. இயற்கைப் புணர்ச்சி
9. பகற் குறி, இரவுக் குறி, அல்ல குறி
10. பாங்கற் கூட்டம்

11. தோழியற் கூட்டம்
12. அலர்
13. வரைவுகடாயஅதல்
14. பிரிவு
15. பிரிவைத் தள்ளிப்போடல்
16. மடல்
17. உடன்போக்கு
18. நினைந்தவர் புலம்பல்
19. தலைவி நாணம் விட்டுப் பேசல்
20. தலைவி நிறையழிதல்
21. ஊடல்
22. கனவு
23. பசலை

ஆகிய செய்திகளைக் கூறுமிடத்து ஒன்றுபடுகின்றார்.

இயல் 3

புறச்செய்திகளில் ஒன்றுபடுமிடங்கள்

தொல்காப்பியர் அகம் பற்றிய செய்திகளை அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்களில் பேசுகிறார். இவ்வியல்களைத் தவிர்த்து பிற இயல்களில் தொல்காப்பியர் கூறும் செய்திகளைப் புறச் செய்திகளின் அடித்தளமாகக் கொண்டு வள்ளுவர் அமைத்த குறள்களை ஒப்பிட்டு ஒன்றுபடுமிடங்கள் ஆராய்ந்து வகை, தொகைப்படுத்தி இவ்வியல் விளக்குகிறது.

கடவுள் வாழ்த்து

பாடாண்திணை

தொல்காப்பியர் பாட்டுடைத் தலைவனின் புகழ் பாடும்போது கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற குற்றமற்ற மூன்றும் கடவுள் வாழ்த்தொடு சேர்ந்து வரும்

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற

வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்

கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே (தொல் : 1024)

என்கிறார்.

என்பதனை வள்ளுவர் பின்பற்றி பாயிரப் பகுதியில் முதலில் கடவுள் வாழ்த்து, பின் வான்சிறப்பு, அடுத்து நீத்தார் பெருமை, தொடர்ந்து அறன் வலியுறுத்தல் என்றமைகிறது. **(குறள் காலம் ப.108)**

எழுத்து - ஒற்றுமை

எழுத்ததிகார நூன்மரபு இயலின் முதல் நூற்பாவிலே தொல்காப்பியர்

எழுத்தெனப்படுப

அகல முத னகர ஈறுவாய்

முப்ப.ஃ.தென்ப (தொல் : 1)

திருவள்ளுவரும் திருக்குறள் தொடக்கத்திலேயே

அகர முதல எழுத்தெல்லாம் .. (குறள் : 1)

எனத் தொல்காப்பிய நெறியில் அமைத்துள்ளார்.

சொல் - ஒற்றுமை

ஒற்கம்

தொல்காப்பியர் உரியியலில் வறுமையைக் குறிக்க இரு சொற்களைத் தருகிறார். அவை

1. இலம்பாடு
2. ஒற்கம்.

ஆகும்.

இதனைக் குறிக்கும் நூற்பா

இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை (தொல் : 843)

ஆகும்.

மலைகடுகடாஅமில்

இலம்படு புலவர் ஏற்றகை நிறைய (மலைபடு : 576)

நன்னது கொடைச் சிறப்பை விளக்குமிடத்து வறியநிலையிலுள்ள புலவர்களுக்குக் கை நிறைய பெரிய அணிகலன்களையும் வழங்குமிடத்து இச்சொல் இடம்பெற்றுள்ளது.

ஒற்கத்தின் ஊற்றாந்துணை (குறள் : 414)

வள்ளுவர் கேள்வி அதிகாரத்தில் ஒருவன் கற்கவில்லை என்றாலும் கேட்க வேண்டும். அது அவன் தளர்ச்சி அடையும் நேரத்தில் ஊன்று கோலாக உதவும் என்ற பொருள் தரும் குறளில் ஒற்கம் தளர்ச்சி என்ற பொருளில் இடம் பெற்றுள்ளது.

எல்லாரும்

தொல்காப்பியர் வேற்றுமை உருபுகள் பெயர்களோடு சேரும்போது ஏற்படும் புணர்ச்சி விதிகளைப் பற்றி பேசும் போது

எல்லாரும் என்ற படர்க்கை இறுதியும் (தொல் : 191)

எல்லாரும் என்ற சொல் இடம் பெற

திருக்குறளில்

புலவி நுணுக்கத்தில்

தலைவி பரத்தமை உடைய தலைவனிடம்

‘‘பரத்தமை உடையவனே! உன்னைப் பெண்ணியல்பு உடைய எல்லாரும் தம் கண்களால் நுகர்வர். அது எச்சில் பட்டதாகும். எனவே நான் அதனை நுகரேன் என்கிறாள்.

அக்குறள்

பெண்ணியலார்எல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் நின் பரத்த மார்பு (குறள் : 1311)

பார்ப்பான்

தொல்காப்பியர் தம்காலத்தில் செல்வாக்குப் பெற்ற பார்ப்பனர்களைக் கூறத் தயங்கவில்லை.

பார்ப்பான் என்பவன் பாணன், கூத்தன், பாங்கன், தோழி முதலியவர்களைப் போல உயர்ந்த வகுப்பினருக்கு ஊழியஞ் செய்து அவர்கள் உதவி பெற்று வாழ்ந்தவர்கள்.

இவர்கள் தொழில் ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், வேள்வி செய்வித்தல், கொடை பெறுவது, கொடை கொடுக்கச் செய்வது ஆகிய ஆறு வகைத் தொழில்களைச் செய்து வந்தனர்.

இதனை

அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும் (தொல் : புறத்: **74)** உறுதி செய்யும்.

அந்தணர்

அந்தணர் என்ற சொல்லை

அம் + தண் + அர் எனப் பிரித்து அழகான குளிர்ச்சி பொருந்திய தன்மை உடையவர் என்ற பொருள் கூறுவர்.

அந்தணர் நாகரிகம் பெற்ற வகுப்பைச் சார்ந்தவர்.

என்ற **சாமி சிதம்பரனார் கூறுகிறார். (தொல்காப்பியத் தமிழர் பக். 92 – 93)**

தமிழ்ச் சமூகக் கட்டுமானத்தில் பார்ப்பனர்கள் நிலையானதொரு இடத்தைப் பெற்றனர் மேலும் சமூகக் கட்டுமானத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றதை **பேரா. தி.சு. நடராஜன்** மதிப்பிட்டுள்ளார். **(சமூக விஞ்ஞானம் பழந் தமிழகத்தில் பார்ப்பனர்கள் ப.4)**

பழங்காலத்தில் பார்ப்பனர்களில் பெரும்பாலானோர் வேதத்தை ஓதிக் கொண்டு ஒழுக்கக் கேடர்களாக இருந்து வந்துள்ளனர் என்பதை

……………………பார்ப்பான்

பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் (குறள் : 134)

வழி அறியலாம்.

வள்ளுவர் பார்ப்பான் ஒழுக்கக் கேடர்களாக விளங்கியதைப் பதிவு செய்யத் தவறவில்லை என்ற பா.வீரமணியியின் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.**(ப.69)**

மேலும் கலித்தொகை 65ஆம் பாடலும் ஒழுக்கக் கேடான பார்ப்பனனைக் கூறுகிறது.

அந்தணன், பார்ப்பான் என்ற இருவகையினர் இருந்தனர். பிற்காலத்தில் இரண்டும் ஒரு பொருளையே தந்தன.

தொல்காப்பியர் வாகைத்திணையின் இயல்பு, இலக்கணம், பாகுபாடு குறித்து விளக்குமிடத்து

அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும் (தொல் : 1021)

எனக் கூறியதற்கு

மறப்பினும் ஒத்துக் கொள்ளலாகும் பார்ப்பான் (குறள் : 134)

என்றமைத்த குறளும் வேதமரபுக்கு, வைதிகச் சமயத்துக்கு எதிராக எழுந்த மறுப்புக் குரலே ஆகும் என்ற பா.வீரமணிக் கருத்து ஒப்பு நோக்கத் தக்கது.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்

நின்றது மன்னவன் கோல் (குறள் : 543)

அந்தணர் செய்த நூற்கும் அதில் கூறப்படும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது அரசனது கோல்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன் மறப்பர்

காவலன் காவான் எனின். (குறள் : 560)

ஒரு நாட்டில் மன்னன் முறையாக ஆட்சி செய்யவில்லை எனில் மக்களது முயற்சியால் ஆகும் பயன் குறையும்.
ஆறு தொழில் செய்யும் அந்தணர் நூல் மறப்பர் என்பது பொதுவான பொருள்.

புலவர் குழந்தை

அறுதொழிலோர் என்ற சொல்லுக்கு **முதன்மையான தொழிலுடையோர்** எனப் பொருள் தருகிறார். மேலும் அறுதொழிலை வினைத்தொகை என்கிறார்.

பா.வீரமணியோ

அறுதொழிலோர் என்பது **பார்ப்பனரையேக்** குறிக்கும்

சொல்லே ஆகும் **(வள்ளுவரின் உலகப் பார்வை ப. 68)**

வள்ளுவர்

இறுதியாக, உறுதியாக

அந்தணர் என்போர் அறவோர்…..(குறள் : 30)

அறத்தின் வழி எவன் நிற்கிறானோ அவனே அந்தணன் எனக் கூறுவதன் மூலம் பார்ப்பனர், அந்தணரை வள்ளுவர் ஏற்றுக் கொள்ள வில்லை என்பது உறுதியாகிறது.

பொருள் ஒற்றுமை

எச்சவியலில் தொல்காப்பியர் பிரிவில் மகளிர் பற்றி முடிபு கூறும்போது

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்

பொற்புடை நெறிமை இன்மையான (தொல் : 981)

என்கிறார்.

கடலைப் போன்ற மிகுந்த காமத்தால் வருந்தினாலும் மடலேறாமல் பொறுத்திருக்கும் பெண் பிறப்பே சிறப்புபடையது என்ற பொருள் தரும்

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்

பெண்ணின் பருந்தக்கது இல் (குறள் : 1137)

என்ற குறளில தொடரிலுள்ள **பொருள் ஒற்றுமையாக** உள்ளதைக் காணலாம்.

குறிப்பால் ஒற்றுமை

செய்யுளியலில் பாவகை, அதில் உரைக்கப்படும் பொருள் பற்றிக் கூறி வரும் பொழுது

அந்நிலை மருங்கின் **அறமுதலாகிய**

மும்முதற் பொருட்குமுரியவை என்ப **(தொல் : 1363)**

ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்னும் நான்கு வகைப்பாக்களின் பாடுபொருள் அறம், பொருள், இன்பம்,
என்னும் மூன்று பொருளையும் அடிப்படையாகக் கொண்டமையும் என்ற பொருளில் தொல்காப்பியர் குறிப்பாக அமைத்துள்ளார்.

அறம் பொருள் இன்பம் உயிரச்ச நான்கின்

திறந் தெரிந்து தேறப்படும் ….. **(குறள் : 501)**

தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரத்தில் அமைச்சராகத் தெரிந்தெடுக்கப்படும் ஒருவன் அறம், பொருள், இன்பம், உயிரச்சம் நான்கினையும் ஆராய்ந்து பார்த்த பின் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

தொல்காப்பியர் அற முதலாகிய எனக் குறிப்பாகக் கூற வள்ளுவரோ அறம். பொருள், இன்பம் என்று வெளிப்படையாகக் கூறுகிறார்.

மெய்ப்ப்பாடு

தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாட்:டுக்குரிய கூறுகளை திருக்குறளில் தொல்காப்பிய மெய்ப்பாடுகள் என்ற நூலில் பிற மெய்ப்பாடுகளுக்கும் சான்று தருகிறார். **(சொ. சேதுபதி பக் : 164 – 183)**

தொடர் ஒற்றுமை

நிறைமொழி மாந்தர்

செய்யுளியலில் தொல்காப்பியர் பிசி, முதுமொழி குறித்துக் கூறியபின் மந்திரம் பற்றி

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த

மறைமொழி தானே மந்திரம் என்ப **(தொல். : 1434)**

என்கிறார்.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து

மறைமொழி காட்டிவிடம். **(குறள்** : 28)

வள்ளுவர் நீத்தார் பெருமையைக் கூறுமிடத்து நிறைமொழி மாந்தர், மறைமொழி ஆகிய தொடர் ஒற்றுமைகளைக் கூறுகிறார்.

குறள் 67, 69, 70. ஆகியனவற்றில் ஆண்மகவனின் தனிச் சிறப்பு கூறப்படுகிறது.

சான்று

ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன் மகனைச்

சான்றோன் எனக் கேட்ட தாய் (குறள் : 69)

ஆண்மகவினை இருவருமே விதந்து கூறுகின்றனர்.

அறவாழ்வுச் சிறப்பு

காமம் சான்ற கடைக்கோட் காலை

ஏமம் சான்ற மக்களொடு துவன்றி

அறம்பரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்

சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே (கற்பி : 51)

களவிலும், கற்பிலும் இன்பம் நுகர்ந்து பெருவாழ்வு வாழ்ந்த தலைமக்கள் முதுமையிலும் தமக்குப் பாதுகாப்பான தம் மக்களொடும், சுற்றத்தொடும் அறவாழ்வு வாழ்ந்து பேரின்ப வாழ்வை அடைதலே பிறவிப் பயனாகும் என்ற பொருளில் தொல்காப்பியர் அமைக்க

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப்படும் (குறள் : 50)

என வள்ளுவர் அமைத்து

அறவாழ்வின் முதன்மையை இருவருமே சுட்டுவதைக் காணலாம்.

எண்களில் ஒற்றுமை

தொல்காப்பியர் ஒன்று முதல் பத்து, தொண்ணூறு, நூறு, ஆயிரம், தொள்ளாயிரம் வரை குற்றியலுகரப் புணரியலில் குறிப்பிட

வள்ளுவர் பல இடங்களில் பரந்துபட்டுப் பயன்படுத்துகிறார்

ஒன்று

திருக்குறளில் ஒன்று என்ற எண் 32 குறள்களில் இடம் பெற்றுள்ளது.

சான்று

ஒன்று

கு.எ. 221, 232 875, 932,1006, 1202, 1216, 1241, 1255, 1271, 1273, 1275, 1325 ஆகியனவற்றில் ஒன்று அதே வடிவத்தில் இடம்பெற்றுள்ளது.

…………………………………………

ஒன்று நன்று உள்ளக்கெடும் **(குறள் : 109)**

ஒன்றானும்

ஒன்றானும் எனும் வடிவத்தில்

ஒன்றானும் தீச்சொல்………….. **(குறள் : 128)** என்றும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு

கு.எ 156, 168 1266 ஆகியனவற்றில் ஒன்று ஒரு என்ற வடிவத்திலும் இடம்பெற்றுள்ளது.

சான்று

அழுக்காறு என **ஒரு** பாவி...... (குறள் : 168)

இரண்டு

இரண்டு என்ற எண் அதே வடிவத்திலும் இரண்டும், இரண்டின், இரு, இருமை ஆகிய வடிவத்திலும் வள்ளுவரால் ஆளப்பட்டுள்ளது.

இரண்டு

கண்ணுடையர் என்பர் கற்றோர்முகத்து இரண்டு

..........................(கு.எ. : 393) என்று உள்ளது.

இரண்டும்

இரண்டும் என்ற எண், கு.எ எண் 19, 402, 455, 760 ஆகியனவற்றில் உள்ளது.

மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டின்.

(குறள் : 455)

இரண்டின்

கு.எ 674, 1022. ஆகியனவற்றில் இரண்டு இன் உருபு சேர்ந்து இடம்பெற்றுள்ளது.

இரு

இருள்சேர் இரு வினையும் ....(குறள் : 5)

இருமை

இருமை வகை தெரிந்து.......(குறள் : 23)

ஆகிய வடிவங்களில் குறளில் இடம்பெற்றுள்ளது.

சான்று

வினை பகை என்று இரண்டின்..... (குறள் : :674)

மூன்று

மூன்று என்ற எண் அதே வடிவத்தில் ஐந்து குறள்களிலும்

கு.எ.383, 682, 684, 941, 1085

மூன்றின்

மூன்றின் என இன் உருபு சேர்ந்து ஒரு குறளிலும் 688

சான்று

தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்

வாய்மை வழி உரைப்பான் தலை.

மூன்றும்

மூன்றும் என உம் சேர்ந்து இரு குறள்களிலும்

கு.எ. 952, 1085

மூவர்

மூவர் என ஒரு குறளிலும்

கு.எ. 589

சான்று

ஒற்று ஒற்று உணராமை ஆள்க உடன் மூவர்

சொல் தொக்க தேறப்படும்

வள்ளுவரால் பயன்படுத்தப் பட்டுள்ளது.

நான்கு

ஒன்பது குறள்களில் நான்கு என்ற எண் வள்ளுவரால் எடுத்தாளப்பட்டுள்ளது. அவை

35, 146, 382, 390, 513, 605, 743, 766, 953 ஆகும்.

சான்று

நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்

வகை என்ப வாய்மைக்குக் குடி (குறள் : 953)

ஐந்து

ஐந்து என்ற எண்ணைக் குறிப்பிட்டு ஐந்து குறள்கள் உள்ளன. அவை

குறள் எண் 271, 632, 675, 939, 983 ஆகும்.

சான்று

அமைச்சர்களின் இலக்கணத்தைக் கூறும் அமைச்சு அதிகாரத்தில்

வன்கண் குடிகாத்தல் கற்று அறிதல் ஆள்வினையோடு

ஐந்துடன் மாண்டது அமைச்சு (குறள் : 632)

என்ற குறளாகும்.

ஆறு

படை, குடி, உணவுப்பொருள், நல்ல அமைச்சர், நண்பர்கள், அரண் என்ற ஆறும் உடையவன் அரசருள் சிங்கம் போன்றவன் எனும் பொழுது ஆறு என்ற எண் வள்ளுவரால் ஆளப்பட்டுள்ளது. **(குறள் : 381)**

ஏழு

எழு

ஏழு என்ற எண்முதல் குறுகி எழு என இரு குறட்பாக்களில் இடம் பெற்றுள்ளது. அவை **62, 107** ஆகும்.

எழுமையும்

ஏழு என்ற எண்முதல் குறுகி எழு + மை + உம் = எழுமையும் என மூன்று குறட்பாக்களில் இடம் பெற்றுள்ளது **(126, 538, 1285)**

எட்டு

இறைவணக்கத்தில் இறைவனின் குணத்தைக் கூறுமிடத்து எட்டு என்ற பொருள் தரும் **எண்**குணத்தான்
ஆளப்பட்டுள்ளது. (குறள் :9)

ஒன்ப.்.து, ப.்.து என ஒன்பது, பத்து எனக் கூறியதை வள்ளுவர் பயன்படுத்தவில்லை.

கோடி

கோடி மடங்கு என நன்மை தரும் செயல்களைக் கூறுமிடத்து **(குறள்** :: **816, 1061)** கோடி இடம்பெற்றுள்ளது.

சான்று

பேதை பெருங்கழீஇ நட்பின் அறிவுடையார்

ஏது இன்மை கோடி உறும் (குறள் :: **816)**

எழுபது கோடி

பக்கத்திலிருந்து கொண்டே அரசனுக்குத் தீங்கை எண்ணும் மந்திரிக்கு எழுபது கோடி பகைவர் ஒப்பாவர் என்னும் பொருள் தரும் **(குறள் : 639)** இல் எழுபது கோடி என்ற எண் இடம் பெற்றுள்ளது.

பத்து கோடி

தீ நட்பு அதிகாரத்தில்

நகைப்பதற்கு மட்டும் நட்புக் கொள்ளும் நண்பர்களால் வரும் தீமையை விடப் பகைவர்களால் வரும் துன்பங்கள் பத்து கோடி மடங்கு நல்லனவாகும் என்ற பொருளமைந்த **(குறள் : 817)** இல் பத்து கோடி இடம் பெற்றுள்ளது.

பலகோடி

நல்ல குடியில் பிறந்தவர்களின் உயர்வைக் கூறுமிடத்து

அடுக்கிய கோடி எனப் பயன்படுத்தி உள்ளார். அக் குறள்

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்

குன்றுவ செய்தல் இலர் (குறள் : 954)

என்பதாகும்.

மேலும் **(குறள் : 1005)** இலும் அடுக்கிய கோடி வள்ளுவரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்தில் கோடி என்ற எண் இல்லை.

இலக்கணக் கூறுகளில் ஒற்றுமை

உவம உருபில் ஒற்றுமை

அறிந்த ஒன்றைக் கூறி அறியாத ஒன்றை விளக்குவது உவமை. தொல்காப்பியர் உவமை ஒன்றையே அணியாகக் கூறுகிறார்.

ஒன்றன் சிறப்பைப் புலப்படுத்தவும், அழகை விளக்கவும், காதலன்பைக் காட்டவும், வலிமையை உணர்த்தவும் உவமை கூறத் தோன்றும் என்ற தமிழண்ணல் கருத்து சிந்திக்கத் தக்கது. **(தொல்காப்பியம் : மெய்ப்பாட்டியல், உவமையியல் தொகுதி : 3)**

தொல்காப்பியர்

அவை தாம்

அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப

…………………… (தொல்.உவம : 1232)

என 36 உவம உருபுகளைக் கூற

வள்ளுவர் அதில்

ஏறத்தாழ 7 உவம உருபுகளையே கூறி தொல்காப்பியருடன் ஒன்றுபடுகிறார்.

தொல் கூறிய அற்று, அனைய உவம உருபை வள்ளுவரும் பயன்படுத்தி உள்ளார்.

மாத்திரை

எழுத்துக்கள் ஒலிக்கப்படும் கால நீட்டத்தைக் குறிக்க பயன்படும் காலயளவு மாத்திரை எனப்படும்.

அளவு

கண்ணிமை நொடி என அவ்வே மாத்திரை (நூான் : 7)

அரை மாத்திரை

அரைமாத்திரை அளவு 49 476 1014 ஆகிய குறட்பாக்களில் உள்ளன.

ஒருமாத்திரை

ஒரு மாத்திரை அளவு 226 363 414 ஆகிய குறட்பாக்களில் உள்ளன.

.இடைச்சொல்

அம்ம

அம்ம கேட்பிக்கும் (இடையி : 28)

ஒருவரை ஒருவர் ஒன்று கேள் என்று கவனிக்கச் சொல்வதாகும்.

1107

எற்று

எற்று என் கிளவி இறந்த பொருட்டே (இடையி : 15)

கு.எ 438 இல் உள்ளது.

மன்

கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று

அம்மூன்று என்ப மன்னசைக் சொல்லே (இடையி : 4)

மன் என்ற இடைச்சொல் **கழிவு, ஆக்கம், ஒழியிசை என்ற மூன்று பொருளில்**

1326, 1327, 1329, 1266, 1254, 1253, 1216, 1212, 1206, 1184, 1170, 1165, 1164, 1146, 1138, 1125, 1102, 1086, 1016, 996, 990, ஆகிய குறள்களிலும்

கொல்

கொல்லே ஐயம் (இடையி : 20)

கொல் என்ற இடைச்சொல் ஐயப் பொருளில்

2, 70, 85, 188, 189, 211, 228, 263, 345, 930, 932, 1004, 1029, 1048, 1070, 1081, 1103, 1165, 1197, 1203, 1204, 1205, 1207, 1211, 1220, 1225, 1267, 1307, 1328 ஆகிய குறள்களிலும்

மற்று

மற்று என் கிளவி வினைமாற்று அசைநிலை

அப்பால் இரண்டென மொழிமனார் புலவர் (இடையி : 14)

மற்று என்ற இடைச்சொல் வினைமாற்று, அசைநிலை என்ற இரண்டு பொருளில்

60, 65, 95, 349, 373, 540,591, 923, 961, 968, 1151, 1166, 1294, 1308.

ஆகிய குறள்களிலும்

தில்

விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்று

அம் மூன்று என்ப தில்லைச் சொல்லே. (இடையி : 5)

தில் எனுமிடைச்சொல் விழைவு, காலம், ஒழியிசை, என்ற பொருளில்

கு.எ. 253 இலும்

கொன்

கொன் என்ற இடைச்சொல் அச்சம், பயமின்மை, காலம், பெருமை என்ற பொருளில்

கு.எ. 254 இலும்

பயின்று வந்துள்ளது.

அளபெடை

நீட்டி ஒலிக்க விரும்பினால் எந்த அளபு நீட்டி ஒலிக்க வேண்டுமோ அந்த அளவு இயைபுடைய ஒலியைக் கூட்டி ஒலித்துக் கொள்க என்பர் புலவர் இதனை உணர்த்தும் நூற்பா

நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய

கூட்டி எழூஉதல் என்மனார் புலவர் (தொல் : 6)

ஆகும்.

வள்ளுவரும் ஏறத்தாழ 24ஐ அறத்துப்பாலிலும், 44ஐ பொருட்பாலிலும், 21ஐ இன்பத்துப் பாலிலும் கையாண்டுள்ளார்.

சான்று

அறத்துப்பால்

இறைநலம் எனுமதிகாரத்தில் உண்மையான அறிவை உடையவனது நல்ல தாள்களை தொழவில்லை எனின் கற்றதனால் பெற்ற பயன் ஒன்றுமில்லை என்ற பொருளமைந்த குறள்

கற்றதனால் **………………..**

நற்றாள் **தொழாஅர்** எனின். **(குறள் : 2)**

ஆகும்.

ஊழ்

ஊழ் என்பதற்கு முறைமை என்று புலவர் குழந்தை பொருள் தந்து, நமது எண்ணத்தின் முயற்சியின் செயலின் தகுதிக்கு ஒத்து வருதலும், ஒவ்வாது வருதலுமாம் ஒத்து வருதல் - ஆகூழ் ஒவ்வாது வருதல் - போகூழ் என்றும் விளக்கம் தருகிறார் (ப.117)

நல்லவை **எல்லாஅந்**……..(குறள் : 375)

ஒருவன் செல்வத்தைத் தேடும்போது போகூழால் நல்லவை எல்லாம் தீயனவாகும். ஆகூழால் முன்பு தீயனவாக இ.ருந்த எல்லாம் நல்லனவாகும் என்பது பொருளாகும்.

பொருட்பால்

வள்ளுவர் ஒற்றாடல் எனும் அதிகாரத்தில் ஒற்றுவனுக்குரிய இலக்கணத்தை

பிறர் ஐயப்படாத உருவத்துடனும், ஐயப்பட்டும் பிறர் வெகுண்டு நோக்கினால் அதற்கஞ்சாதும் எவ்வளவு வருத்தினாலும் எப்போதும் நெஞ்சில் உள்ளவற்றை வெளிப்படுத்தாமலும் உள்ள வல்லவனே ஒற்றனாவான் என்ற பொருளமைய உள்ள குறள்

கடாஅ உருவொடு ………………….

உகாஅமை வல்லதே ஒற்று **(குறள் : 585)**

ஆகும்.

புலவர் குழந்தை ஒற்றர் என்பதற்கு கரந்துரையாளர் (சி.ஐ.டி.) என விளக்கம் தந்துள்ளார். **(திருக்குறள் : புலவர் குழற்தை உரைப .181)**

இன்பத்துப்பால்

புலவி

புலவி, ஊடல் இரண்டும் ஒரு பொருட் சொல்லாகும்.

புலவி என்பதற்கு, தலைவனும் தலைவியும் ஒருவரோடு ஒருவர் மன வேறுபாடு கொள்ளல் என்பது பொருளாகும்.

புலவி என்ற அதிகாரத்தில் அமைந்த அளபெடை

புல்லாதிராஅ……………… (குறள் : 1301)

வாயிலாகச் சென்ற தோழி தலைவி வாயில் நேரும் பொருட்டு நீ அவரைத் தழுவாமல் இருந்து பின்வாங்கு, அவர் அடையும் துன்ப நோயை நாமும் சிறிது காண்போம் என்ற பொருளில் இக்குறள் அமைகிறது.

ஆய்தம்

அறத்துப்பாலில் ஏறத்தாழ 24 குறட்பாக்களிலும் (38, 49, 76, 86, 132, 162. 170, 171 – 180, 220, 226, 238, 242, 262, 363, 368) ஆய்தம் இடம் பெற்றுள்ளது.

சான்று

அவாவறுத்தல் எனுமதிகாரத்தில்

அவாவில்லார்க்கு இல்லாகும் துன்பம் **அஃதுண்டேல்**

தவாஅது மேன்மேல் வரும் **(குறள் : 368)**

என்ற குறளில் ஆசையற்றவர்க்குத் துன்பமில்லை. ஆசை இருந்தால் துன்பம் மேன்மேலும் வரும் என்ற பொருளமைந்த குறளில் ஆய்தம் இடம்பெற்றுள்ளது.

பொருட்பாலில் ஏறத்தாழ 19 (414, 427, 459, 476, 541, 556, 572, 575, 591, 600, 621, 758, 773,943, 971, 1001, 1014, 1031, 1037) குறட்பாக்களிலும் ஆய்தம் இடம் பெற்றுள்ளது.

சான்று

ஊக்கமுடைமை என்ற அதிகாரத்தில்

உரமொருவற்குள்ள வெறுக்கை **அ.்.தில்லார்**

மரமக்களாதலே வேறு **(குறள் : 600)**

ஒருவனுக்கு சிறந்த அறிவானது ஊக்கமிகுதி. அது இல்லையேல் அவன் மரத்துக்கு ஒப்பாவான் என்ற பொருளில் உள்ள குறளில் ஆய்தம் பயின்று வந்துள்ளது.

இன்பத்துப் பாலில் ஏறத்தாழ 5 (**1093, 1161, 1166, 1270, 1308**) குறட்பாக்களிலும் ஆய்தம் இடம் பெற்றுள்ளது.

சான்று

குறிப்பறிதல் எனுமதிகாரத்தில்

நோக்கினால் நோக்கி இறைஞ்சினாள் **அ.்.தவன்**

யாப்பினுள் அளட்டிய நீர் **(குறள் : 1093)**

அமைந்த குறளில் நோக்கினாலும், நாணத்தாலும் புணர்ச்சி குறித்த குறளாகும்.

வெ.்.காமை அதிகாரத்தில் மட்டும் 13 முறை ஆய்தம் இடம்பெற்றுள்ளது. பத்து குறட்பாக்களிலும் ஆய்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வினாச்சொல்

ஆ ஏ ஓ அம் மூன்றும் வினாஅ (நூன்மரபு : 32)

என்று கூற

இளம்பூரணர்

எகரமும், யாகாரமும் வினாப் பெயர்களில் மொழி முதலில் வரும் என்று கூறியதைப் பின்பற்றி வள்ளுவர்

காதலர் தூதோடு வந்த கனவினுக்கு

யாது செய்வேன் கொல் விருந்து (**குறள் : 1211)**

என்ற குறளில் என்ன செய்வேன் என்ற பொருளில் யாது என்னும் வினாச் சொல் இடம்பெற்றுள்ளது

எவன்

எவன் என்ற வினாச் சொல்

46 79 99 237 272 345 ஆகிய குறள்களில் உள்ளன.

சான்று

மற்றும் தொடர்ப்பாடு **எவன்** கொல் …….(குறள் : 345)

உரிச்சொல்

உரிச்சொல் என்பது பெயர், வினைகளுக்கு அடையாக வரும். உரிச்சொற்கள் தனியான வேர்ச்சொற்களைப் பெற்றிருந்தாலும் தனித்து இயங்கும் ஆற்றல் அற்றவை. இவை செய்யுளுக்கு உரியவை என்று தொல்காப்பியர் கருதுகிறார்.

உறு

உறு தவ நனி என வருஉம் மூன்றும்

மிகுதி செய்யும் பொருள (உரி : 3)

உறு, தவ, நனி என்ற மூன்றும் மிகுதி என்னும் குறிப்புப் பொருளை உணர்த்தும். இவை

98 734 744 756

ஆகிய குறள்களிலும்

சான்று

உறு பொருளும் உல்கு பொருளும் **…………..(குறள் : 756)**

சால

475 770, 1233 ஆகிய குறள்களிலும் இடம் பெற்றுள்ளது.

சான்று

பீலிபெய் சாகாடும்...............

சால மிகுத்துப் பெயின்.

நனி

கல்லாதவரும் **நனி** நல்லர் கற்றார் முன்

சொல்லாது இருக்கப் பெறின் **(குறள் : 403)** என்ற குறளிலும்

கடி

கடியென் கிளவி

வரைவே கூர்மை காப்பே புதுமை

விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே

அச்சம் முன்தேற்று ஆயீர் ஐந்தும்

மெய்ப்படத் தோன்றும் பொருட்டாகும்மே. (உரி : 87)

ஆகிய பத்துப் பொருளையும் உணர்த்துவதோடு

ஐயம், கரிப்பு என்னும் இரண்டு பொருளையும் உணர்த்தும்.

தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் ....

(குறள் : 1205)

புரை

.................புரை உயர்பு ஆகும் (உரி : 4)

202 919 ஆகிய குறள்களில் புரை இடம்பெற்றுள்ளது.

சான்று

வரைவு இலா மாண்இழையார் மென்தோள் **புரை** இலாப்

பூரியர்கள் ஆழும் இன்று. **(குறள் : 919)**

உரு

உரு உட்கு ஆகும் (உரி : 4)

உரு எனும் சொல் அச்சம் என்ற பொருளைத் தரும்**.**

585 667 ஆகிய குறள்களில் உரு இடம்பெற்றுள்ளது.

சான்று

கடாஅ **உரு**வொடு கண் அஞ்சாது **……. (குறள் : 585)**

தொகுப்புரை

1. கடவுள் வாழ்த்தினைத் தொல்காப்பியர் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே என்று கூறியதை ஏற்றுக் கொண்ட வள்ளுவர் கடவுள் வாழ்த்து என்ற தனியதிகாரம் அமைத்துள்ளார்

2. தொல்காப்பியர் எழுத்தினை **அ**கரம் முதல் **ன**கரம் வரை என வகைப்படுத்தியதனைப் போல வள்ளுவரும் முதல் குறளினை **அ**கர முதல எனத் தொடங்கி இறதி அதிகாரத்தின் இறுதிக் குறளில் கூடி முயங்கப்பெறி**ன்** என முடித்தலில் ஒற்றுமையைக் காணமுடிகிறது.

3. சொல் ஒற்றுமையில் ஒற்கம், எல்லாரும், பார்ப்பான், அந்தணர் போன்றவற்றை இரு நூல்களிலும் காணமுடிகிறது.

4. தொல்காப்பியத்தோடு பொருள் ஒற்றுமையில் வெளிப்படையாக மடலையும், பா வகை,யில் குறிப்பாகவும் ஒன்றுபடுகிறார் வள்ளுவர்.

5. இரு நூல்களிலும் தொடர், அறவாழ்வுச் செய்திகளில் ஒற்றுமைக் கூறுகள் தென்படுகின்றன.

6. தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியியலில் கூறிய ஒன்று முதல் எட்டு வரை குறிப்பிடும் எண்களைக் குறளில் பயன்படுத்தி உள்ளார்.

.

இயல் 4

அகச்செய்திகள் மாறுபடுமிடங்கள்

தொல்காப்பியர் அகம் பற்றிய செய்திகளை அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்களில் பேசுகிறார். இச்செய்திகளை அடித்தளமாகக் கொண்டு வள்ளுவர் அமைத்த குறள்களை ஒப்பிட்டு வேறுபடுமிடங்களை ஆராய்ந்து வகை, தொகைப்படுத்தி இவ்வியல் விளக்குகிறது.

செய்யுளில் சொற்பொருள்

இசைதிரிந்து இசைப்பினும் இயையுமன் பொருளே

அசைதிரிந்து இசையா என்மனார் புலவர் (பொருளி : 1)

சொல்லோடு சொல் தொடர்ந்து இயல்பான மொழியில்
பொருள் உணர்த்துவதைப் போன்று செய்யுள் மொழியில் இசைக்காக அசைகளாகச் சொற்கள் பிரிக்கப்பட்ட போதிலும் பொருள் வேறுபடுவதில்லை
என்று தொல்காப்பியர் கூறுகிறார்

வள்ளுவர்

பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்

இறைவனடி சேரார் (குறள் : 10)

இதில் புணர்ச்சியில் குறள் திரிந்து இசைத்தாலும் பொருள் மாறவில்லை.

<u>ஊழ்</u>

குறளில் தனி அதிகாரம்.

தொல்காப்பியத்தில் இல்லை

திணை

தொல்காப்பியத்தில் அன்பின் ஐந்திணை எழு திணைப் பற்றி நூற்**பாவில்** விளக்க

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளந்த எழுதிணை என்ப (அகத் : 1)

வள்ளுவர் நேரடியாகக் கூறவில்லை.

குறிஞ்சி

1. தகையணங்குறுத்தல்
2. குறிப்பறிதல்
3. புணர்ச்சி மகிழ்தல்
4. நலம் புனைந்துரைத்தல்
5. காதற் சிறப்பு

முல்லை

1. நாணுத்துறவு
2. அலர் அறிவுறுத்தல்
3. பிரிவாற்றுமை
4. படர்மெலிந்திரங்கல்
5. கண்விதுப்பழிதல்

பாலை

1. பசப்புறுபரவல்
2. தனிப்படர் மிகுதி
3. நினைந்தவர் புலம்பல்
4. கனவுநிலை உரைத்தல்

5. பொழுதுகண்டிரங்கல்

நெய்தல்

1. உறுப்பு நலனழிதல்
2. நெஞ்சொடு கிளத்தல்
3. நிறையழிதல்
4. அவர்வயின் விதும்பல்
5. குறிப்பறிதல்

மருதம்

1. புணர்ச்சி விதும்பல்
2. நெஞ்சொடு புலத்தல்
3. புலவி
4. புலவி நுணுக்கம்
5. ஊடல் உவகை

ஆகிய அதிகாரங்களில் ஐந்திணை பற்றிய பதிவுகளைக் காணலாம்.

பாவகை

அகத்திணைப் பாடல் கலி, பரிபாடலில் அமைய வேண்டும் என, தொல்காப்பியர் கூற வள்ளுவர் குறள்வெண்பாவில் அமைத்துள்ளார்.

நால்வகைப் பண்பு

உயிர், நாணம், பேதமை என்ற மூன்று பண்புகளும் தலைவி, தோழி, நற்றாய், செவிலி ஆகிய நால்வர்க்கும் உண்டு என்பதைத் தெரிவிக்கும் நூற்பா

உயிரும் நாணும் மடனும் என்றிவை

செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய (தொல் : பொருளி : 6)

ஆகும்.

குறளில் இல்லை.

மகளிர் பண்பு

அடக்கத்தொடு இருத்தல், மனவலிமையைக் காட்டல், நடுவுநிலைமையோடு இருத்தல், இனியவை பேசல், நன்மை தீமையறிதல், தம்மை எளிதில் பிறர் புரியாதவாறு நடத்தல் ஆகியன மகளிருக்குரிய பண்புகளாகும். இதனை

செறிவும் நிறையும் செம்மையும்

அறிவும் அருமையும் பெண்பால் ஆன (பொருளி : 14)

குறி

தொல்காப்பியத்தில் உண்டு வள்ளுவத்தில் இல்லை.

நலம் புனைந்துரைத்தல்

தொல்காப்பியத்தில நலம் புனைந்துரைத்தலை கூற்றில் ஒன்றாகக் கூற

வள்ளுவர் நலம்புனைந்துரைத்தலுக்கு தனி அதிகாரமே அமைத்து விளக்குகிறார்.

அலர்

அலர் மொழி, அலரின் பயன் பற்றி

களவும் கற்பும் அலர் வரைவு இன்றே (கற்பி : 21)

அலரின் தோன்றும் காமத்தின் மிகுதி (கற்பி : 22)

என்று தொல்காப்பியர் கூற

வள்ளுவரோ அலரறிவுறுத்தல் (குறள் : 115) எனத் தனி அதிகாரமே வகுத்துள்ளார்.

அறத்தொடுநிற்றல்

தலைவியின் காதலை தோழி அறிந்து தன் தாயாகிய செவிலியிடம் கூற, செவிலி நற்றாயிடம் கூறுவாள். நற்றாய் கணவனிடம் தெரிவிப்பாள். பின் மணம் முடிதலும் உண்டு.

வள்ளுவத்தில் அறத்தொட நிற்றல் இல்லை.

தலைவி தலைவன் விரும்புவதைத் தோழி செவிலிக்கு, செவிலி நற்றாய்க்கு,நற்றாய் இல்ல ஆடவர்க்கு என ஒருவர் ஒருவரிடம் முறையாகச் செய்தியை உணர்த்துவது அறத்தொடு நிற்றலாகும். தலைவி அறத்தொடு நிற்கக் கூடாது.

அறத்தொடு நிற்கும் காலத்து அன்றி

அறத்தியல் மரபிலள் தோழி என்ப (பொருளி : 11)

தொல்காப்பியத்தில உண்டு

எளித்தல் ஏத்தல்…………….. (பொருளி : 12)

என்ற நூற்பா தலைவியின் கற்பு மணத்திற்காக ஏழு நிலையில் தாயோடு அறத்தொடு நிற்பாள் என்கிறது.

குறளில் இல்லை.

கற்பு சிறப்பு

தொல்காப்பியத்தில் நேரடியாக உண்டு. வள்ளுவத்தில் இல்லை.

கற்பெனப்படுவது கரணமொடு புணரக்

கொளற்குரிய மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே.

(கற்பி : 1)

தோழி கூற்று

கற்பியலில் தோழி கூற்றாக தொல்காப்பியர் 32 வகைகளைச் சுட்ட

வள்ளுவர் நேரடியாக எக் கூற்றையும் கூறவில்லை.

தோழி அறிவு

உறுகண் ஓம்பல் தன்னியல்பு ஆகலின்

உரியது ஆகும் தோழிகண் உரனே (பொருளி : 43)

தலைவிக்குத் துணையான தலைவனுக்கு வரும் இடர்களை நீக்கி அவனுக்குப் பாதுகாப்பு அளிக்கும் தோழிக்கு அறிவுத் திறன் அடிப்படையானதாகும்.

குறளில் தோழி பற்றி வெளிப்படையாகச் செய்திகளில்லை.

வரைவு கடாஅதல்

களவொழுக்கத்தில் ஈடுபட்டிருந்த தலைவன் விரைவில் தலைவியை மணந்து கொள்ளுமாறு தோழி அவன் உள்ளத்தைத் தொடும் முறையில் கூறுவதே வரைவு கடாஅதலாகும் இதற்கு எடுக்கும் தோழியின் முயற்சிகளை

பொழுதும் ஆறும் காப்பும் இவற்றின்

……………………………………

வரைதல் வேட்கைப் பொருள (பொருளி : 15)

களவு வாழ்க்கைக்கு ஆசைப்படும் தலைவனின் வேட்கைக்கு மறுப்புக் கூறி உடனே மணமுடிக்கத் தோழி கூறுவதை

வேட்கை மறுத்துக் கிளந்தாங்கு உரைத்தல்

மரீஇ மருங்கின் உரித்து என மொழிப (பொருளி : 16)

தொல்காப்பியர் என்ற நூற்பாவின் மூலம் விளக்குகிறார்.

வரைவு கடாஅதலை நேரடியாக வள்ளவர் கூறவில்லை.

உடன்போக்கு

உடன்போக்குச் செல்வது திருமண முயற்சிக்கு வழிவகுக்கும் என்பதை

ஒருதலை உரிமை வேண்டினும்.....

போக்கும் வரைவும் ......(பொருளி : 27)

என்கிறது தொல்காப்பியம்.

தொல்காப்பியத்தில் உண்டு

தலைவி தன் இல்லத்தில் உள்ளோரைப் பிரிந்து தலைவனுடன் செல்லும் போது மன நிலையை விவரிக்கும் **(அகத்:39 – 45)** நூற்பாவின் உடன்போக்கிருந்ததை அறியமுடிகிறது.

வள்ளுவத்தில் நேரடியாக இல்லை.

உடன்போக்கிலும் திருமணம் நிகழ்வதை

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே (கற்பி : 2)

கீழோர் மணம்

மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்

கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே (கற்பி : 3)

மணச்சடங்கு தோற்றம்

பொய்யும் வழுவும் புகுந்த பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் (கற்பி : 4)

என்ற நூற்பாவின் வழி சமூகத்தில் பொய்யும் குற்றங்களும் விளைந்த பின்னர் மணம் என்ற சடங்கு தோற்றம் பெற்றதை அறியலாம்.

வள்ளுவத்தில் இல்லை.

உறவு

தொல்காப்பியத்தில் தந்தை, தனயன் பற்றிய குறிப்பு உள்ளது.

களவியல் , தலைவியின் களவொழுக்கத்தை அவளின் தந்தையும் தமையனும் குறிப்பாக மட்டும் அறிந்திருப்பர்

என்ற நிலையினைக் கூறுமிடத்து

தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப (களவு : 135)

குறளில் தனயன் பற்றிய குறிப்பில்லை.

தந்தை பற்றி வள்ளுவர்

மக்கட்பேறு அதிகாரத்தில்

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து

முந்தியிருப்பச் செயல் **(குறள்: 67)**

அதே அதிகாரத்தில் இறுதிக் குறளில்

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் **தந்தை**

என் நோற்றான் கொல் எனும் சொல் **(குறள் : 70)**

இக்குறளில் மகன், தந்தை இருவருமே இடம் பெற்றுள்ளனர்.

பரத்தை

பரத்தைப் பிரிவு மருதத்திற்குச் சிறப்பாயினும் பிற திணைகளிலும் இது நிகழும். அந்தணர், அரசர் வேளாளர், வணிகர் ஆகியோர் தலைவியின் ஊடல் தீர்க்க வாயில்களை அனுப்புவது உண்டு.

இதனை

பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே

நிலத் திரிபு இன்று அ.்.து என்மனார் புலவர் (பொருளி : 28)

பிரிவு

குறளில்

1. செலவு – பிரிவாற்றமை
2. ஆற்றாமை - படர்மெலிந்திரங்கல்
3. விதுப்பு – அவர் வயின் விதும்பல் முதல் புணர்ச்சி விதும்பல் வரை.
4. புலவி – நெஞ்சொடு புலத்தல் முதல் ஊடல் ஊடலுவகை வரை.

என வகைப்படுத்தலாம்.

பிரிவு வழி

தலைவன் பிரிந்து செல்லும் வழி கரடு முரடான கொடியது எனக் கூறுவதில் வரையறை இல்லை என்பதை

சுரம் என மொழிதலும் வரை நிலை இன்றே (பொருளி : 20)

வள்ளுவர் பிரிதலைப் பேசுகிறார்

பிரிவாற்றாமை

கற்பு வாழ்க்கையில் தலைவி கூற்று நிகழும் இடங்களாக 20 ஐக் குறிப்பிடுகிறார்.

அதில்

1. **புலம்பு பெரிதாதல் (கற்பி : 6 : 2)**

தலைவன் பிரிவால் வருந்தம் நிலையைக் காணமுடிகிறது.

ஆனால் வள்ளுவர் பிரிவாற்றாமையைக் கற்பியலில் தனி அதிகாரமைத்துக் (116) கூறுகிறார்.

தொழிற்வயிற் பிரிவு

தலைவன் திருமணத்திற்குப் பின் பொருள் தேடச் செல்ல வேண்டிய நிலை. அதனை ஆற்றாத தலைவி அவன் பிரிவை

1. உறவினரற்ற ஊரில் குடியிருப்பதை விடக் கொடுமையானது
2. வளையல்கள் கழன்று விடுவதைப் பார்த்தவர்கள்
   ஊருக்கெல்லாம் துாற்றி விடுவது போலுள்ளது.
3. காமநெருப்பு பிரிந்ததால் சுடுகிறது.
4. பொறுத்திருக்க இயலாது.
5. நிம்மதியாக இருக்க முடியாது.
6. பிரியவில்லை என்றால் என்னிடம் கூறுங்கள் விரைவில் வந்து விடுவேன் எனக் கூறுவதானால் உயிரோடு இருப்பவர்களிடம் கூறிக் கொள்ளுங்கள்.
7. காமவேதனையை அடக்கி தலைவன் வரும் வரை பொறுத்திருந்து, திரும்பி வந்தவுடன் வாழ்க்கை நடத்தகிறவர்கள் தான் பெரும்பாலும் பெண்கள் நிலையாக உள்ளது.

   என்று புலம்புகிறாள்.

சான்று

அரிதாற்றி அல்லல் நோய் நீக்கிப் பிரிவாற்றிப்

பின் இருந்து வாழ்வார் பலர் (குறள் : 1160)

பரத்தை - பிரிவு

பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்

நீத்து அகன்று உறையார் என்மனார் புலவர்

பரத்தையின் பிரிந்த காலையான (கற்பி : 46)

தொல்காப்பியத் தலைவி கற்பியலில் கூற்று நிகழ்த்துமிடங்களில்

1. இன்பமும் இடும்பையும்

2. இளவருநிலை

3. எங்கையர்க்குரை

4. அடிமேல்விழுந்த கிழவன் **(கற்பி: 6 : 4, 6. 8. 14)**

என்று பரத்தைப் பிரிவை சமூகம் ஏற்றுக் கொண்டதைச் சுட்ட

வள்ளுவர் கூறவில்லை.

தொல்காப்பியர் **(மெய் 268 : 5)** கூறுகிறார்.

ஊடல்

தொல்காப்பியர் கற்பியலில் தலைவனுக்கும் ஊடல் உண்டு **(கற்பி : 15)** என்றும் அதில் தோழியின் பங்கையும் சுட்ட **(கற்பி : 16, 17)**

வள்ளுவரோ தலைவி மட்டும் ஊடல் கொள்வதைக் கூறி மூன்றதிகாரங்கள் **(புலவி-131, புலவி நுணுக்கம் - 132 ஊடலுவகை - 133)** வகுத்துள்ளார்

வாயில்கள்

தொல்காப்பியர் 12 வாயில்கள் **(கற்பி : 52)** பற்றிச் சுட்ட வள்ளுவர் கூறவில்லை.

1. மாறிவிட்டது.
2. பசலை உரிமையோடு தலைவியின் மேனியில் சவாரி செய்கிறது.
3. காதலர் தழுவல் நீங்கியவுடன் பசலை படர்கிறது.

பசலை கண்டு ஊரார் ஏளனம் செய்யட்டும். **மணம்**

களவியலில்

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

………………………………..

மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள் (களவு : 1)

இதில் குறிப்பிடும் பிரமம் முதல் பைசாசம் ஆறாக உள்ள எட்டு மண வகையும் வடநூலார் வரையறை செய்தது.

அழகு குறைதல்

தலைவன் பிரிவால் தலைவியின் அழகு குறைவதை அவள் உடல் உறுப்புகளும் உணர்ந்துள்ளன என்பதைத்

தொல்காப்பியர்

வண்ணம் பசந்து புலம்புங் காலை

உணர்ந்தது போல உறுப்பினைக் கிழவி

புணரந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே. (பொருளி : 7) எனக் கூறுவதை

வள்ளுவர்

தண்ணம் துறைவன் தணந்தமை நம்மினும்

முன்னம் உணர்ந்த வளை (குறள் : 1277)

தலைவன் பிரிவால் தலைவி கை வளை நெகிழ்ந்து கீழே விழுகின்றன என்கிறார்.

உறுப்பு நலனழிதல்

தலைவனைப் பிரிந்து புலம்பும் தலைவியின் உடம்பில் வனப்புக் குறைந்திருப்பதைப் போல அவளுடைய உடல் உறுப்புகளும் உணர்ந்துள்ளன எனக் கூறுவதும் உண்டு. இதனை

வண்ணம் பசந்து புலம்புங்காலை

உணர்ந்தது போல உறுப்பினைக் கிழவி

புணர்ந்த வகையாற் புணர்க்கவும் படுமே (பொருளி : 7)

உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்

என் உற்றன கொல் இவை எனின் அல்லது

கிழவோன் சேர்தல் கிழத்திக்கு இல்லை (பொருளி : 8)

என்ற நூற்பாவிலும் தலைவி அழகு குறைவதை தொல்காப்பியர் சுட்டுகிறார்.

மேலும் பெருந்திணை மெய்ப்பாடுகளுள் ஒன்றான

உண்டியிற் குறைதல் உடம்பு நனி சுருங்கல் **(மெய் : 22 : 4)**

வள்ளுவரோ உறுப்பு நலனழிதலுக்குத் தனியதிகாரமே (126) வகுத்துள்ளார்

அதில் அழகிழக்கும் உறுப்புகளாகக்

1. கண் **(1231, 1232 . 1239 1240)**
2. உடல் மெலிவு **(1233 1236)**
3. கை **(1234 1235)**

பட்டியலிடுகிறார் வள்ளுவர்.

தொல்காப்பியர் பொதுவாக அழகிழக்கும் உடல் உறுப்புகள் எனக் கூற வள்ளுவர் விரிவாக்கிக் கூறியுள்ளார்.

தொல்காப்பியர் பெருந்திணைக்குக் கூறிய மெய்ப்பாட்டைக் கூறின் ஒன்றையும் தனியொரு அதிகாரமாக்கி வள்ளுவர் கற்பியல் தலைவிக்குக் கூறியுள்ளார்.

நெஞ்சொடு கிளத்தல்

தலைவி தன் நெஞ்சொடு பேசுதலை

ஒருசிறை நெஞ்சமொடு உசாவும் காலை

உரியது ஆகலும் உண்டென மொழிப **(பொருளி : 9)**

இதன் விளக்கமாக, தலைவனைப் பிரிந்த தலைவி தன் நெஞ்சத்தொடு புலம்பி வருந்தும் போது நாம் தலைவன் இருக்கும் இடத்திற்குச் செல்வோமா என்று கூறும் முறை உண்டு என்பர் என்பதமைகிறது.

வள்ளுவர் நெஞ்சொடு பேசுதலை தனி அதிகாரமாக்கிக விளக்கி உள்ளார்.

இது மூவகையாக அமைகிறது.

1. மனதிடம் புலம்புவது
2. மனதை அனுப்புவது.
3. மனதிடம் தன் கண்களையும் அழைத்துப் போகச் சொல்வது.

இதில்

வகை 1

1. காமவேதனையைத் தீர்க்கும் மருந்து ஒன்று கூறு.
2. தலைவனைக் கொடியவன் என்றால் நீ ஏன் வருந்துகிறாய்
3. நீ என் மீது அனுதாபப் பட்டு என்ன பலன்.

எனப் பலவாறு புலம்பி தன் மனதை தலைவன் இருக்குமிடம் போகச் சொல்கிறாள்.

வகை 2

1. மனமே பெண்மைக்குரிய நாணத்தை விட்டு அவரைக் காண புறப்பட்டு விட்டாயே. ஊனக்கு என்ன மடத்தனம்
2. காதலர் மனதில் உள்ளார். நீ யாரைத் தேடிப் புறப்பட்டாய்.

வகை 3

நீ போகும்போது என் கண்களையும் அழைத்துச் செல். இல்லையாயின் இக்கண்கள் அவரைப் பார்க்க வேண்டும் என்று என்னைத் தின்று விடுவன போலத் துன்பப்படுத்தும்.

தொல்காப்பியர் தலைவி தலைவன் இருக்குமிடத்திற்குச் செல்வோமா என்று கூறலாம் எனக் கூற

வள்ளுவர் தலைவியின் நாணத்தை முன்னிறுத்தி கண்களையே போகச் சொல்லும் நிலையில் கவிஞனாக மிளிர்வதோடு தமிழ்பண்பாட்டுத் தலைவியை முன்னிறுத்துகிறார்.

தொல்காப்பியர் பெருந்திணைக்குக் கூறிய மெய்ப்பாட்டக் கூறின் ஒன்றை

இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல் (மெய் : 22:1)

தனியொரு அதிகாரமாக்கி வள்ளுவர் கற்பியல் தலைவிக்குக் கூறியுள்ளார்.

நாணம் விட்டுப் பேசல்

தலைவன் பிறபெண்களுடன் இருந்து வந்ததை மறைக்கும் போதும், தனக்கு காமவேட்கை மிகும் போதும் மட்டுமே நாணம் நீங்கிப் பேசுவாள் என்பதை

தன்வயின் கரத்தலும்....(பொருளி : 10)

வள்ளுவர்

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் மற்று (குறள் : 1314)

பசலை

தொல்காப்பியர் பெருந்திணை மெய்ப்பாடுகளைப் பட்டியலிடுமிடத்து பசலை பாய்தலைக் கூறுகிறார்

இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்

...

பசியடநிற்றல் பசலைபாய்தல் (மெய் : 22)

பசப்புறு பரவல்

உடல் நிறம் மாறுபட்டதால் தலைவிக்கு ஏற்படும் துன்பங்களை பசப்புறுபரவல் எனப் பெயரிட்டுத் தனியதிகாரமே வகுத்துள்ளார் வள்ளுவர்.

இதில்

4. காதல் இல்லாததால் தலைவியின் மேனி முழுவதும் நிறம்

என்பன போன்ற கருத்தமைய வள்ளுவர் பாடியுள்ளார்.

சான்று

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்

அள்ளிக்கொள் வற்றே பசப்பு (குறள் : 1187)

தொல்காப்பியர் பெருந்திணைக்குக் கூறிய மெய்ப்பாட்டைக் கூறின் ஒன்றை தனியொரு அதிகாரமாக்கி வள்ளுவர் கற்பியல் தலைவிக்குக் கூறியுள்ளார்.

நினைந்தவர் புலம்பல்

தலைவியின் நாணமே அகப்பொருளுக்கு மிகவும் நுட்பமாகக் கருதப்படுகிறது. எனவே அதற்குப் பழிவராத வகையில் பெண்மை அமைதலே சிறப்புடையது என்பதை

மிக்க பொருளினும் பொருள்வகை புணர்க்க

நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே (பொருளி : 23)

பொழுது கண்டிரங்கல், நிறையழிதல், புணரச்சி விதும்பல் ஆகிய அதிகாரங்களில் ஆகிய அதிகாரங்களில் தலைவியின் நாணம் எல்லை கடந்தே அமைகிறது.

நாண் அழிதல் என்ற தலைப்பே எல்லைக் கடத்தலுக்குச் சான்றாகிறது.

சான்று

நாணனெ ஒன்றோ அறியலம்…….(குறள் : 1257)

…………………………….நெஞ்சத்தை

யாமத்தும் ஆளும் தொழில் (குறள் 1252)

கனவு

தலைவன் தலைவி

காம உணர்வுகளோடு இன்ப துன்பங்களில் வாழும் தலைவனும் தலைவியும் கனவு கண்டு அறிதலும் உண்டு என்பதை

கனவும் உரித்தால் அவ்விடத்தான (பொருளி : 3)

நற்றாய்

தலைவனோடு உடன்போக்குச் சென்ற தலைவியை நினைத்து நற்றாயும் மகளைப் பற்றிக் கனவு காண்பதும் உண்டு.

இதனை

தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின் (பொருளி : 4)

எனத் தொல்காப்பியம் விளக்க

வள்ளுவர் கனவுநிலை என ஒரு தனி அதிகாரமே அமைத்து விளக்கி உள்ளார்

மேலும் தலைவியின் கனவு பற்றி மட்டுமே வள்ளுவர் பேசுகிறார்.

கனவு

தொல்காப்பியர் பொருளியலில் கனவு பற்றிக் கூறுகிறரர்.

தலைமக்கள் கனவு

காமஉணர்வுகளோடு இன்ப துன்பங்களில் வாழும் தலைமக்கள் கனவு கண்டு அறிதலும் உண்டு என்பதை

கனவும் உரித்தால் அவ்விடத்தான **(பொருளி : 3)**

நற்றாயின் கனவு

தலைவி தலைவனுடன் உடன் போக்கு சென்ற காலத்தில் நற்றாய் கனவு காண்பாள். இதனை தொல்காப்பியர்

தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்ப (**பொருளி** : 4)

என்ற நூற்பாவின் வழி அறியலாம்.

வள்ளுவரோ கனவு நிலைஉரைத்தல் (122) என்ற ஒரு அதிகாரமே அமைத்துக் கனவினை விளக்கிச் செல்கிறார்

தலைவன் தலைவியின் கனவில் வந்து துன்பம் செய்வதை பலபடக் கூறுகிறார் வள்ளுவர்.

சான்று

காதலர் தூதொடு வந்த கனவினுக்கு

யாது செய்வேன் கொல் விருந்து (கனவு நிலை உரைத்தல் : 1211)

நற்றாய் பற்றி வள்ளுவர் பேசவில்லை

தொல்காப்பியர் பெருந்திணைக்குக் கூறிய மெய்ப்பாட்டக் கூறின் ஒன்றை தனியொரு அதிகாரமாக்கி வள்ளுவர் கற்பியல் தலைவிக்குக் கூறியுள்ளார்.

ஒருபாற் கூற்று

இன்பமோ துன்பமோ மிக்க தலைவனோ, தலைவியோ தனக்கத் தானே பேசிக் கொள்வதே ஒருபாற் கூற்று.

தங்கள் மன உணர்வுகளை வெளிப்படுத்த உயிரினங்கள், நிலவு, கடல்,போன்றவற்றுடன் தூது போகச் சொல்லல் போன்ற வகையில் செயல்படுவதாகும் என்பதை

நோயும் இன்பமும் இருவகை நிலையில்

………………………………. (பொருளி : 2)

நெஞ்சொடு பேசல்

தலைவனைப் பிரிந்த தலைவி தன் நெஞ்சத்தொடு புலம்பி வருந்துவதை

ஒருசிறை நெஞ்சமொடு உசாவும் காலை

உரியது ஆகலும் உண்டென மொழிப (பொருளி : 8)

என்ற நூற்பா தெரிவிக்கிறது.

வள்ளுவரோ நெஞ்சொடு தலைவி புலத்தலை தனி அதிகாரத்தில் (130) கூறி உள்ளார்

உள்ளுறை உவமம்

உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு எனக்

கெடவருமட மரபின் உள்ளுறை ஐந்தே (பொருளி : 46)

என்ற ஐந்து வகையுள்

1. உவமம் உள்ளுறை
2. சுட்டு உள்ளுறை

என்ற இரு வகையினை வள்ளுவர்

தொடி நோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி

அஃ.து அவள் ஆண்டு செய்தது (குறள் : 1279)

என்ற குறளிலும்

3. நகை உள்ளுறை

அசையிற்கு உண்டு ஆண்டு ஏஎர் யான் நோக்கம்

பசையினாள் பைய நகும் (குறள் : 1098)

என்ற குறளிலும்

4. சிறப்பு உள்ளுறை

மலரினும் மெல்லியது காமம் சிலர் அதன்

செவ்வித் தலைப்படுவர் (குறள் : 1289)

வள்ளுவர் கையாண்டுள்ளார்.

உள்ளுறையின் பண்பு

குறைவு படாத பெருமை மிக்க இன்பத்தை உணர்த்தும் இயல்பும் உள்ளுறைக்குள்ள பண்பாகும் என்பதை

அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்

தன்வயின் வருதலும் வகுத்த பண்பே (பொருளி : 47)

எனக் கூறிஉள்ளார் தொல்காப்பியர்.

வள்ளுவரோ

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண் என்னும்

தீயாண்டுப் பெற்றாள் இவள் (குறள் : 1104)

என்கிறார்.

கைக்கிளைக்கு உரியவை

பாங்கர் நிமித்தம் பன்னிரெண்டனுள் முதல் மூன்றான

காட்சி ஐயம் தெளிவு கைக்கிளைக்கு உரியவையாகும்.

முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே (களவு : 102)

பெருந் திணைக்கு உரியவை

பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே (களவு : 103.)

பாங்கர் நிமித்தம் பன்னிரெண்டனுள் அடுத்த நான்கான நோக்குவை அவையே போறல் மறத்தல் மயக்கம் சாக்காடு ஆகியன பெருந் திணைக்கு உரியவை ஆகும்.

வள்ளுவர் கைக்கிளை, பெருந்திணை இழுக்கு எனக் கருதி அமைக்கவில்லை.

தொகுப்புரை

1. தொல்காப்பியர் களவு கற்பு என்று இரு அதிகாரங்களை அமைத்து அகச் செய்திகளைக் கூறுகிறார்.

   ஆனால் வள்ளுவர் தொல்காப்பியர் களவியல், கற்பியலில் கூறிய முக்கிய நிகழ்வுகளை மட்டும் நாடகப்பாங்கில் அதிகாரங்களாக வகுத்துள்ளார்

2. பாவகையில் வள்ளுவர் தொல்காப்பியரைப் பின்பற்றவில்லை.

3. தந்தை, தனயன் உறவுகளைத் தொல்காப்பியர் கூற வள்ளுவரோ தந்தை மகன் பற்றி மட்டுமே கூறி உள்ளார்.

4. ஐந்திணை தொல்காப்பியர் கூற வள்ளுவர் நேரடியாகக் கூறவில்லை.

5. உடன்போக்கு குறித்து தொல்காப்பியர் விளக்க வள்ளுவர் கூறவில்லை.

6. கனவு தலைமக்கள், நற்றாய்க்கு ஏற்படும் எனத் தொல்காப்பியர் கூற வள்ளுவரோ தலைவிக்கு மட்டும் ஏற்படுவதைக் கூறி உள்ளார்

7. மகளிருக்குள்ள நால்வகைப் பண்புகளைத் தொல்காப்பியம் கூற திருக்குறள் கூறவில்லை.

8. நெஞ்சொடு பேசுவதைத் தொல்காப்பியர் கூற்றில் ஒன்றாகக் கூற வள்ளுவர் தனி அதிகாரமே வகுத்துள்ளார்

9. நலம் புனைந்தரைத்தலை தொல்காப்பியர் கூற்றில் ஒன்றாகக் கூற வள்ளுவர் தனி அதிகாரமே வகுத்துள்ளார்

10. பரத்தை பற்றி தொல்காப்பியர் கூற வள்ளுவர் கூறவில்லை.

11. அறத்தொடு நிற்றலை தொல்காப்பியர் கூற வள்ளுவர் கூறவில்லை.

12. ஊழ் குறித்து தொல்காப்பியர் கூறவில்லை. வள்ளுவர் தனி அதிகாரமே அமைத்துச் சிறப்பிக்கிறார்.

13. பிரிவு வகையில் தொல்காப்பியரும் வள்ளுவரும் மாறுபடுகின்றனர்.

14. குறி குறித்து தொல்காப்பியர் கூற வள்ளுவர் கூறவில்லை.

15. அலர், பயன் குறித்து இரு நூற்பாக்களில் தொல்காப்பியர் கூற வள்ளுவர் தனி அதிகாரமே அமைத்து விளக்குகிறார்.

16. வாயில்கள். மணம் குறித்து தொல்காப்பியர் கூற வள்ளுவர் கூறவில்லை.

17. புலவி, புலவி நுணுக்கம் பற்றி வள்ளுவர் தனி அதிகாரம் அமைத்து விளக்க, தொல்காப்பியர் ஊடல் பற்றி மட்டுமே கூறுகிறார்.

18. உள்ளுறை வகைகளை தொல்காப்பியர் சுட்ட வள்ளுவர் கூறவில்லை. உரையாசிரியர்கள் கூறி உள்ளனர்.

19. கைக்கிளை, பெருந்திணை, பரத்தை மரபு பற்றி தொல்காப்பியர் கூற வள்ளுவர் கூறவில்லை.

20. புலவி, புலவி நுணுக்கம் பற்றி வள்ளுவர் தனி அதிகாரம் அமைத்து விளக்க, தொல்காப்பியர் ஊடல் பற்றி மட்டுமே கூறுகிறார்.

இயல் 5

புறச் செய்திகளில் மாறுபடுமிடங்கள்

தொல்காப்பியர் அகம் பற்றிய செய்திகளை அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்களில் பேசுகிறார். இவ்வியல்களைத் தவிர்த்து பிற இயல்களில் தொல்காப்பியர் கூறும் செய்திகளை புறச் செய்திகளின் அடித்தளமாகக் கொண்டு வள்ளுவர் அமைத்த குறள்களை ஒப்பிட்டு வேறுபடுமிடங்கள் ஆராய்ந்து வகை, தொகைப்படுத்தி இவ்வியல் விளக்குகிறது.

தலைமக்கள் பெயர்

தொல்காப்பியர் நிலமக்கட் பெயரையும் தலைமக்கட் பெயரையும்

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்

ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே. (தொல் : அகத்: 967)

எனக் கூற வள்ளுவர் கூறவில்லை.

மகளிரின் பண்புகள்

அடக்கம், மனவலிமை, நடுவுநிலை, இனியவை பேசுதல், நன்மை தீமை அறிதல், தம்மை எளிதில் பிறர் புரியாதவாறு நடத்தல் என்பவை மகளிர்க்குரிய உயர்ந்த பண்புகள் என்பதை

செறிவும் நிறையும் செம்மையும் செப்பும்

அறிவும் அருமையும் பெண்பால் ஆன (தொல் : பொருளி : 206)

வள்ளுவர் மகளிருக்குரிய உயர்ந்த பண்புகளைத் தொகுத்துக் கூறாது ஆங்காங்கே களவியல், கற்பியலில் கூறுகிறார்

கைக்கிளை, பெருந்திணை

பிறரிடம் அடிமைத் தொழில் புரிவோரும், பிறர் ஏவிய தொழிலைச் செய்வோரும் ஐந்திணை ஒழுக்கத்திற்கு உரியோர் ஆகார். கைக்கிளை, பெருந்திணைக்கு உரியவர் **(தொல் : அகத் : 25)** என்றும், இதற்குரிய இலக்கணத்தை **(அகத் : 53, 54)** தொல்காப்பியர் கூற

கைக்கிளை, பெருந்திணை **(குறள் : 1131 நீங்கலாக)** வள்ளுவர் கூறவில்லை.

இதனை அகப்பொருள்விளக்கம் ஒருதலைக் காமம் என்றும், ஒவ்வாக் காமம் என்று கூறும். **(அகப்: விள: 3, 5)**

பழந்தமிழரின் அகவாழ்க்கையைத் தெளிவாக ஆராய்ந்த வ.சுப. மாணிக்கம்

கைக்கிளையை ஒருதலைக்காமம், சிறுகாதல், நிகழா ஒழுக்கம், குறு வடிவம் என்றும்

பெருந்திணையை ஒவ்வாக் காமம், மிகுதிக் காதல், கழிபேர் காதல், மிகை வடிவம்

என்றும் ஒப்பிட்டுக் கூறுகிறார். **(தமிழ்க்காதல்: பக்: 203. 269)**

இதனால்தான் வள்ளுவர் கைக்கிளை, பெருந்திணையை ஆதரிக்கவில்லை போலும்..

சமயங்கள்

தொல்காப்பியர் ஐவகை நிலங்களைக் கூறி அதற்குரிய தெய்வங்களைக் **(தொல் : அகத்: 952)** குறிப்பிட

வள்ளுவர் எந்தத் தெய்வங்களையும் நேரடியாகக் கூறவில்லை.

வள்ளுவரின் காலத்தில் புழக்கத்தில் இருந்த இந்திரன், செய்யான், செய்யவன், முகடி, தாமரையான், அடியளந்தான், தாமரைக் கண்ணான் போன்ற வேதமரபுத் தெய்வங்களைச் சுட்டிச் செல்கிறார்.

கடவுள் வாழ்த்தில் ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இலான், அறவாழி அந்தணன் என இறைவனின் தொன்மையையும் பண்பையும் சிறப்பையுமே போற்றிச் செல்கிறார். எவ்விடத்தும இறைவன் பெயரைச் சுட்டவில்லை.

தன் கணவனையே தெய்வமாகத் தொழுபவள் கூறினால் மழை உடனே பெய்யும் **(குறள் : 55)** என்றும் வள்ளவர் கூறியுள்ளார்.

கடவுள் நம்பிக்கை

தொல்காப்பியர் கடவுள் வாழ்த்தினை

கொடிநிலை கந்தழி வள்ளி......

....

கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே (புறத் : 1034)

என்றும்

புறநிலை வாழ்த்து

வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்

பழிதீர் தெய்வமொடு வழிவழி சிறந்து

என்று ஆளுமிடங்களிலும்

தெளிவாகக் கடவுள் வாழ்த்து என்பதையும், வழிபடுதெய்வம் என்பதையும் குறிக்கிறார்

மேலும்

கருப்பொருள் கூறுமிடத்து தெய்வம் உணாவே

என உணவுக்கு முன் தெய்வத்தை வைக்கிறார்.

பழந்தமிழர் மெய்யுணர்வுக் கோட்பா:டு

வாகைத்திணையில் வரும் கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை

அருளொடு புணர்ந்த அகற்சி

காமம் நீத்த பால்

என்பனவும்

காஞ்சித் திணையில் வரும்

தபுகார நிலை, தாபத நிலை

பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்து

என்பனவும் பழந்தமிழர் மெய்யுணர்வுக் கோட்பாடுகள் எனக் கொள்ளத் தக்கன என்கிறார் புலவர். இளங்குமரன். **(இலக்கண வரலாறு ப. 80)**

பழந்தமிழர் வழிபாடு

கொற்றவை நிலை, வேலன் வெறியாட்டு, பூவை நிலை, காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், ...என வரும் வெட்சிப்பகுதிகள் பழந்தமிழர் வழிபாட்டினைக் காட்டுவன.

சேயோன், மாயோன், வேந்தன் என்ற திணை நிலைத்தெய்வங்களைச் சுட்டுகிறார் (மு.க.நூ. ப.81)

கடவுள் வாழ்த்து எனத் தனியே நூலின் முதலில் பாடவில்லை.

வள்ளுவர் கடவுள் வாழ்த்து எனத் தனியே பாடியுள்ளார்

சடங்கு

தொல்காப்பியர் வேலன் வெறியாட்டில் சில சடங்கு முறைகளைக் கூற

வள்ளுவர் சடங்கு மறுப்பினை

அவிசொரிந்து ....(குறள் : 259) என்றும்,

67, 88 ஆகிய குறட்பாக்களிலும் காணலாம்.

பல குறட்பாக்களில் கடவுளின் பண்புகளைக் குறிப்பிடுகிறார் என பா.வீரமணி கூறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. **(வள்ளுவரின் உலகப்பார்வை ப.136)**

வருணப் பாகுபாடு

தொல்காப்பியர் மேலோர், உயர்ந்தோர், கீழோர்

என மனுவைப் போல பாகுபடுத்த

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமையான் (குறள் : 972)

வள்ளுவர் எல்லா உயிரும் பிறப்பால் ஒன்று

செய்யும் தொழிலால் வேறுபடுத்தப்படும் என்கிறார்.

உடன் போக்கு

பெற்றோர் மணம் செய்து தர மறுத்த போது தலைவன் தலைவியை உடன் அழைத்துப் போதலை உடன்போக்கு என்பர்.

கொண்டுதலைக் கழிதலும் பிரிந்த அவண் இரங்கலும்

உண்டென மொழிப ஓரிடத்தான (தொல் : அகத் : 961)

உடன்போக்குச் செல்வது திருமண முயற்சிக்கு வழிவகுக்கும்.

வள்ளுவர் உடன் போக்கு பற்றிக் குறிப்பிடவில்லை.

மெய்ப்பாடு

எண்வகையான மெய்ப்பாடுகளும் அகத்திணை, புறத்திணை இரண்டுக்கும் பொதுவாக இருந்தாலும் பொது வழக்கு, அருகிய வழக்கு என்ற நிலையில் உள்ளதை சுபாஷ்சந்திரபோஸ்

புறத்திணை

நகை –   அருகிய வழக்கு

மருட்கை - அருகிய வழக்கு

உவகை - அருகிய வழக்கு

பிற ஐந்தும் பெருவழக்காக உள்ளது என்கிறார் **(தொல் : பொருள் : ப-185)**

எண்வகை மெய்ப்பாட்டைத் தவிர பிற மெய்ப்பாடுகளை சொ.சேதுபதி **திருக்குறளில் பிற மெய்ப்பாடுகள்** என்ற நூலில் பேராசிரியர் உரையைத் துணையாகக் கொண்டு விளக்கிச் செல்கிறார். (பக் - 164 – 183)

விழுமியங்கள்

மனிதன் சமுதாயத்தில் பின்பற்ற வேண்டிய விழுமியங்களை தொல்காப்பியர் வெளிப்படையாகக் கூறவில்லை.

ஆனால் வள்ளுவர் **விருந்தோம்பல், செய்நன்றியறிதல், ஒழுக்கம் உடைமை, பயனில சொல்லாமை, ஒப்பரவுயறிதல், ஈகை, புகழ் ஆகிய அதிகாரங்களில் கூறியுள்ளார்.**

முப்பொருள்

தொல்காப்பியர் முப்பொருளை

அந்நிலை மருங்கின் அறமுதலாகிய

மும்முதற் பொருட்குமுரியவை என்ப (1363)

என்றும்

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு என்றும் கூற

வள்ளுவரோ அறம் . பொருள், இன்பம் என்கிறார்.

ஆரியக் கருத்து

தொல்காப்பியத்தில் ஆரியக் கருத்துக்கள் பரவலாகக் காணப்பட

சில இடங்களைத் தவிரக் குறளிலில்லை.

பரத்தை

தொல்காப்பியர் தம்கால வழக்கிலிருந்த பரத்தை பற்றி அகச்செய்திகளை விளக்குமிடத்துக் கூற

ஆடவர்களைக் கண்டிக்க வரைவின் மகளிர், பிறனில் விழையாமை எள்ற அதிகாரங்களை வள்ளுவர் வகுத்துள்ளார்.

ஊடலுக்கு, பரத்தையரை வள்ளுவர் கூறவில்லை.

பார்ப்பான்

தொல்காப்பியர் தம்காலத்தில் செல்வாக்குப் பெற்ற பார்ப்பனர்களைக் கூறத் தயங்கவில்லை.

ஆனால் வள்ளுவர் பார்ப்பான் ஒழுக்கக் கேடர்களாக விளங்கியதையும் பதிவு செய்யத் தவறவில்லை என்கிறார் பா. வீரமணி **(ப.69)**

அந்தணர் என்போர் அறவோர்

என்று ஒரு புது விளக்கத்தை அளித்து பெரிய புரட்சியையே உருவாக்கி உள்ளார்.

மந்திரம்

தொல்காப்பியர்

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளற்த

மறைமொழி தானே மந்திரம் என்ப (1434)

வள்ளுவரோ

தெய்வந் தொழாள்…. (55) என்கிறார்.

விருந்து

தொல்காப்பிய சொல்லதிகாரத்தில் **(நூற்பா : 540)** இல் புதுமை என்ற பொருளில் முதன்முதலில் விருந்து என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்

பின் பொருளதிகாரத்தில்

விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே (1495)

என்கிறார்.

கற்பு, காமம், நல்லொழுக்கம். மெல்லியல்பு, பொறுமை, அடக்கம் ஆகிய குணநலன்களோடு விருந்தினரை உபசரிக்கும் குணமும், சுற்றத்தைப் பேணும் குணமும் தலைவிக்கு வாய்த்திருக்க வேண்டும் என. **கற்பியலில் (1098)** தெளிவுபடுத்தகிறார்

விருந்தினர் யார?

தமிழ்ப் பண்பாட்டில் முன் பின் பார்த்திராத துறவிகள், வழிப்போக்கர்கள், பிற ஊரார். போன்றோரே விருந்தினர் ஆவார்.

வள்ளுவர் தொல்காப்பியர் சுட்டிய கற்பியல் தலைவியின் குணநலன்களில் ஒன்றான விருந்து போற்றலையும், புதிய(வர்) என்ற பொருள்தரும் விருந்து என்ற சொல்லையும் விரிவாக விளக்கமாகத் தருகிறார். **(குறள் 81, 82, 86, 88, 89)**

சான்று

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பர்

நல் விருந்து வானத்தவர்க்கு (குறள்: 86)

செல்லும் விருந்தினரைப் பேணி வழியனுப்பிய பின் வரும் விருந்தினரை உபசரிக்க எதிர்பார்த்திருப்பவனே வருங்காலத்தில் தேவர்களுக்கு நல் விருந்தாவான் என்று பொருளமையும் குறளில் விருந்து எனும் சொல் மூன்றுவிதமான அடைமொழிகளைக் கொண்டு திகழ்கிறது.

1. செல் விருந்து
2. வரு விருந்து
3. நல் விருந்து

துறை

தொல் களவு, கற்பு ஆகியவற்றுக்கு உரிய துறைகளை முறைப்படுத்தி ஒரு கதை போல கூற

வள்ளுவர் களவு, கற்பு ஆகியவற்றுக்கு உரிய துறைகளை முறைப்படுத்தி ஒரு கதை போல கூறவில்லை.

மணம்

தொல்காப்பியர் திருமணத்தைக் கற்பு எனக் குறித்து அது சடங்குகளுடன் நடத்தப்படும், உடன்போக்கிலும் மணம் செய்தல் உண்டு **(தொல்:பொருள்:கற்பியல்: 1088,1089)** கூற வள்ளுவர் கூறவில்லை.

பிரிவு - வேற்றுமை

வருணப்பிரிவுகள்

கைக்கிளை, பெருந்திணைக்குரியோர் பற்றித் தொல்காப்பியர் கூறுமிடத்து வருணப் பிரிவுகளை

அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்

…………………………(அகத் : 25)

ஏவல் மரபின் ஏனோரும் உரியர்

………   (அகத் : 26)

என்கிறார்.

தொழில்துறைப் பிரிவுகள்

ஒதல், தூது ஆகியன அரசர், அந்தணர், வணிகர், வேளாளர்களுக்குரியது**. (தொல் : பொருள் : அகத்: 29, 34, 35**) என்கிறார். இதனை தமிழ் இலக்கணப் பேரகரரதியும் சுட்டுகிறது. **(அகம் : பக்.24)**

ஆனால் வள்ளுவர் கூறவில்லை.

தொல் தொடர்கள், சொற்கள் சற்றுக் கடினமாக இருக்க

குறளிலில்லை.

கூற்று

தொல்காப்பியத்தில் களவியல், கற்பியலில் தலைவன், தலைவி. நற்றாய், செவிலி. தோழி மற்றும் வாயில்கள் கூற்றமைய

திருக்குறளில் தலைவன், தலைவி கூற்று மட்டுமே காணப்படுகிறது.

மேலும் பாத்திரம் தானே தன் மனநிலையைக் கூறும் புலப்பாட்டைப் போன்று குறட்பாக்களை அமைத்து, தலைவியின் செயல்பாட்டை முன்னிலையிலுள்ள படிக்கும் வாசகனிடம் தலைவன் தெரிவிக்குமாறு கருத்தைப் படர்க்கையில் அயற் கூற்றாக அமைத்துள்ளார்

முதல் குறள் மட்டும் தலைவி தலைவனொடு நிகழ்த்தும் நேர் கூற்றாக அமைத்துள்ளார்.

பிற குறள்கள் தலைவியின் புலவியைப் பற்றி தலைவன் அயற் கூற்றாக உரைக்குமாறு பாத்திரத்தின் வழி நின்று வள்ளுவர் தன் கூற்றை நிகழ்த்திக் கொள்கிறார் என ராஜ்குமார் கூறுவது ஒப்பு நோக்கத் தக்கதாகும். **(திருக்குறள் கருத்துப் புலப்பாட்டில் அணியியல் - கருத்துப் புலப்பாட்டு முறையில் புலவி நுணுக்கமும் ஊடலும் - கட்டுரை ப. 4)**

இலக்கணக் கூறுகளில் வேற்றுமை

பாவகை

அகத்திணைக்குரிய பா வகையைத் தொல்காப்பியர்

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

……………………………………………

கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்

……………………..

என்கிறார். **(அகத் : 56)**

நாடக, உலக வழக்கு, புலமை மிக்காரின் புலனெறி வழக்கு போன்றவற்றை உள்ளடக்கிய கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாக உள்ள ஏழு திணைப் பாடுபொருளுக்கும் கலிப்பாவும், பரிபாடலுமே சிறந்த பாவகை எனப் புலவர் கூறுவதாக முனைவர். சுபாஷ்சந்திரபோஸ் விளக்கம் தருகிறார் **(தொல்காப்பியம்: பொருளதிகாரம் ப.29)**

தொல்காப்பியரின் இலக்கணத்தைச் சிரமேற்கொண்டு வள்ளுவர் குறள் வெண்பாவிலே திருக்குறளை இயற்றி உள்ளார்.

பாவடி

எழுத்தெண்ணிக்கையிலான சிந்தடியும் அளவடியும் வெண்பாவிற்குரியன என்கிறார் தொல்காப்பியர்.

சீர்

தொல்காப்பியர் வரையறுக்காத ஈற்றயற் சீர், ஈற்றுச் சீர் அமைப்புகள் குறளில் ஏறத்தாழ எட்டு இடங்களில் உள்ளன.

எழுத்தெண்ணிக்கையிலான சிந்தடியும். அளவடியும் வெண்பாவுக்குரியன எனத் தொல்காப்பியர் சுட்ட

வள்ளுவர் நாற்சீரடி கொண்ட குறளடிகளில் சிந்தடி ஒன்று கூட இடம்பெறவில்லை.

மாறாக 15, 16 எழுத்துக்கள் கொண்ட நெடிலடிகள் குறளில் குறைவாகவே உள்ளன.

ஓரடியில் நிரை நடுவாகிய வெண்சீர்கள் இரண்ட அல்லது அதற்கு மேற்பட்டு வரும் போது இத்தகு நெடிலடிகள் அமைகின்றன.

உவம உருபு

அறிந்த ஒன்றைக் கூறி அறியாத ஒன்றை விளக்குவது உவமை. தொல்காப்பியர் உவமை ஒன்றையே அணியாகக் கூறுகிறார்.

ஓன்றன் சிறப்பைப் புலப்படுத்தவும், அழகை விளக்கவும், காதலன்பைக் காட்டவும், வலிமையை உணர்த்தவும் உவமை கூறத் தோன்றும் என்ற தமிழண்ணல் கருத்து சிந்திக்கத் தக்கது. **(தொல்காப்பியம் : மெய்ப்பாட்டியல், உவமையியல் தொகுதி : 3)**

தொல்காப்பியர்

அவை தாம்

அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப

…………………… (தொல். : உவம : 1232)

ஏன 36 உவம உருபுகளைக் கூற வள்ளுவர் அதில்

ஏறத்தாழ 7 உவம உருபுகளையே கூறியுள்ளார்

தொல்காப்பியர் கூறாத அற்று, அனைய, ஏர், துணைய என்னும் உவம உருபுகளும் இடம் பெற்றுள்ளன.

எல்லா வகை உவமங்களுக்கும் அன்ன என்ற உவம உருபு பொதுவாக வரும் எனத் தொல்காப்பியர் கூற

வள்ளுவர் அன்ன, அனைய, போல எனப் பயன்படுத்துகிறார்.

போல்

சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் ….(குறள் : 118)

மலரன்ன கண்ணாள் (குறள் : 1118)

முகைமொக்கு……… (குறள் : 1274)

விளக்கற்றம் பார்க்கும்….. (குறள் : 1186)

அரம் போலும்…………..(குறள் : 997)

எனத் தொடங்கும் குறட்பாக்களிலும் போல் என்ற உவம உருபு இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

இதில் மலரன்ன எனத் தொடங்கும் குறளில் **அன்ன, போல் என்ற இரண்டு உவம உருபு** உள்ளது.

போல

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை

இகழ்வாரைப் பொறுத்தல் தலை. (குறள் : 151)

என்ற குறளிலும்

59, 77, 118, 126, 253, 267, 334, 339, 435, 552, 614, 674, 691, 706, 788, 822, 887, 888, 940, 957, 974, 997, 1027, 1048, 1071, 1099, 1105, 1161, 1180, 1186, 1224, 1228, 1253, 1287.,1224

ஆகிய குறட்பாக்களிலும் போல என்ற உவம உருபு இடம் பெற்றுள்ளது.

போலும்

அரம் போலுங் கூர்மையரேனும் மரம் போல்வர்

மக்கட் பண்பில்லாதவர் (குறள் : 997)

